581

~~585~~ 581

REGD. No. M. 2302.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF C...
29 OCT 1934
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. § பலவான்குடி—பவ—ஐப்பசி § திங்கள் ௩.


| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| க. | மக்கட்கு உறுதி ... | 49 |
| உ. | உதவியாசிரியர் ... | 50 |
| ங. | திருவாசகச்சிறப்பு .... | ,, |
| ச. | சிறுதெய்வங்களும் ஜீவவதையும் ... | 53 |
| ரு. | ஊக்கம் ... | 54 |
| சு. | சிவபெருமான் தாருகாவனத்தில் சிருவாணியாய்ப் போகலாமா என்பதற்கு நியாயம் ... | 57 |
| எ. | சங்காசம் ஹிதைப்ரகடனம் ... | 58 |
| அ. | சித்துஞ் சடமும் ... | 59 |
| ௯. | சிறுவர் தீப்பழக்கம் ... | 60 |
| கO. | மனோலய விளக்கம் ... | 61 |
| கக. | அயிலும் மயிலும் ... | 65 |
| கஉ. | கல்லறிவுச் சுடர் ... | 70 |
| கங. | இரக்கத்தின் இறக்கம் ... | 72 |
| கச. | பழமலைக் கோவை | (89-100) |
| கரு. | தேவிகாலோத்தர ஆகமம் | (17—24) |


ஆசிரியர் ராம. சு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:—குமாரவிநாயகர் திருக்கோவிலில் புரட்டாதி ௨௯ சதுர்த்தசி நடராஜர் அபிஷேகமும், சுகாச்சிவாலயத்தில் ௨௯ தொடங்கி ௯ வரை நவராத்திரி பூஜையும் இம்மதி ௯ விஜயதசமி விழாவும் வித்தியாலயங்களில் கிலுக்கு எடுப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

இம்மதி ௯ பௌர்ணமையாகிய இன்று சிவாலயத்தில் அன்னாபிஷேகம் நடைபெறும்.

கந்தர் சஷ்டி:—இம்மதி ௨௯ தொடங்கி ௨௮ சஷ்டி சூரசம்மாரமும் ௨௯ திருக்கல்யாணமும் குன்றக்குடி முதலான திவ்ய க்ஷேத்திரங்களில் கொண்டாடப்பெறும்.

காரைக்குடி:—ஆவணி ௨௯ விநாயகசதுர்த்தி தினம் நாகநாதபுரம் சிவாலயத்தில் திருவாளர் பழ. செ. மு. முத்துக்கருப்பஞ் செட்டியாரவர்கள் ஆதரவில் திரு. சா. வைத்திநாத தேசிகர் செய்துவரும் தேவாரத் திருமுறைபாராயணம் வழக்கம்போல் நிறைவேறியது. கணேசர் ஸ்கந்தர் பிரகன் நாயகிசமேத நாகநாத சுவாமி ஆகிய மூர்த்திகளுக்கும் சைவசமயாசாரியர்கள் நால்வருக்கும் திருமஞ்சன திருவாராதனைகள் சிறப்பாகச்செய்யப் பெற்றன. அன்றிரவு ஹோமசேகருடன் திருமுறைகளையும் திருவீதியின்கண் எழுந்தருளச் செய்யப்பெற்றது.

ஆவினிப்பட்டி:— விவேகானந்தர் கல்விக்கழகத்தின் எட்டாம் ஆண்டு நான்காவது மாதக்கூட்டம் 17—9—34 காலை 10 மணிக்கு பூவாங்குறிச்சி பண்டித திரு. செ. இராமமூர்த்தி ஐயரவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. மாணவர்கள். தேசமுன்னேற்றம் 'துஷ்டர் சிநேகம் கஷ்டம் விளைக்கும்' 'கண்ணகிகற்பு' 'திருத்தொண்டர் பெருமை' 'பிறரைப் பழித்தல்' 'மூர்த்திநாயனார்' 'அன்பு' 'சூரியனும் உயிர்களும்' என்ற அரிய சொற்பொழிவுகளும் திரு. சி. க. க. சோமசுந்தரஞ் செட்டியார்' 'மாநுடப் பிறவியும், அதன்பயனும்' என்ற விரிவுரையும் ஆற்றினர். தலைவர், கல்வி, சபைகூடல், மாணவர் பயிற்சித்திறம் என்பவற்றை நன்கு விளக்கி முடிப்புரை பகர்ந்தனர், ஆசிரியர் வந்தனங் கூறினர்.

எட்டாம் ஆண்டு ஐந்தாம் மாதக்கூட்டம் 3—10—34 மாலை ௬ மணிக்கு குருவிக்கொண்டான் பட்டி, 'பீமாஉடற்பயிற்சிசாலை' அதிபர், திரு. வீர. அ. சொ. சொக்கலிங்கஞ் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. மாணவர் கடவுள்வாழ்த்துப் பாடி 'தமிழ்ப் பெருமை 'அன்பின் ஆற்றல்' 'கடவுளின்கருணை' 'சுத்தம்' 'பிறரைப் பரிகசித்தல்' 'மநுநீதி மன்னர்கருணை' 'அறத்துணை' 'புத்தகங்களின் பயன்' 'வாஸ்கோடிகாமா, 'அருள்' திருநீலகண்டர்' 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்' என்பன பற்றி, இனிது சொற்பொழிவாற்றினர், மாணவர்கள் சார்பாக, ஆசிரியரவர்களுக்கு ஒரு நல்வாழ்த்துப் பத்திரத்தை முரு. சேதுராமன் படித்தளித்தனர். ஆசிரியர் தமிழ்ப்பெருமையும், மாணவர் அன்புக்கு நன்றியும் கூறினர்.

கோளும்பு:—தனவைசிய இளைஞர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா இம்மதி ௨ உ வீரகேசரி அதிபர் திரு. பெ. பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் தலைமையில் இனிது கொண்டாடப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.



| ஆண்டு ௮ | பவ—ஐப்பசி: 1934—அக்டோபர் | திங்கள் ௭. |
|---|---|---|



உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## மக்கட்கு உறுதி.

——

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்" என்றபடி பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும் தங்கட்கு வேண்டும் உறுதியாதெனத் தேர்ந்து அதனைப்பெறுதல் வேண்டும். உடலோம்புதலே உறுதியெனக் கருதுவோர் பலராவர். உயிர்வாழ்தற் கிடமாகிய உடலை இயன்றவளவு பேணவேண்டியதே யாயினும், இளைத்த காளெல்லை முடிந்தால் உடலழியும். இவ்வுடலழியவே வினைக்கீடாகிய வேறோருடலைப் பெறநேரும். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாதுவருமோ அறிகிலேன்" எனக்கூறியிருத்தலால், ஆக்கையின் அநித்தியத்தை நினைவுகூர்ந்து அரிய இம்மானுட யாக்கை யுளபோதே தன்னையும்தனக்காதாரமாயுள்ள தலைவனையும் உணர்ந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சன்மார்க்க நெறிகளைக் கைக்கொண்டு இவ்வுடலோடு கூடிவாழும் ஆன்மாவுக்கும் ஆன்மநாயகனாகவிளங்கும் இறைவர்க்கும் உள்ள அணுக்கத்தன்மையை நுணுகியாய்ந்து உடல்பொருள் ஆவி எனும் மூன்றையும் அவர்க்குத் தத்தஞ் செய்து "உன்பற்றொழிய வொருபற்று மில்லை" என்றுங்கு

ஏனைய பற்றுக்களை முற்றுமொழித்து, இறைவர் திருவடிகளையே துணையாகப்பற்றி அவரை அனவரதமும் மறவாது சிந்தித்துவந்தித்து அவர்பால் அன்புகொண்டு இன்புறுதலே மக்கட்குஇன்றியமையாத உறுதியாகலின் நம்மையாளுடைய அண்ணலாரைப் போற்றி அவர் திருவருளைப் பெற்றுய்வோமாக.

## உதவியாசிரியர்.

நம்சிவநேசனுக்கு உதவியாசிரியராயிருந்த திரு. உ. ரா. சுவாமிநாத பிள்ளையவர்கள், தமது பழயநண்பராகிய "யதார்த்தவசனீ" பத்திராதிபருக்குத் துணைபுரிவதன் காரணமாக தங்கள் காரியத்தை ஒப்புவித்து ஆவணி ௨௯௳ விலகிக்கொண்டு குடந்தைக்குச் சென்றுள்ளார்கள். எட்டாண்டுகளாகத்துணைபுரிந்து அவர்கள்கடமையை நன்றாற்றினர்களென்பது பாராட்டற்பாலது.

---

# திருவாசகச் சிறப்பு.

திருவருட் பெருஞ்செல்வப் பேற்றை யடைந்து சிறுவாழ்வு நீங்கிப் பெருவாழ்வு பெற்றுத்திகழ்ந்து உயர்வடைதற்குரிய அறிவின்மிக்க மக்களாய்ப்பிறந்த தக்கவராகிய அனைவரும் துக்கம்நீங்க எக்காலத்தும் இறைவனாகிய ஒருவனையேமறவாது ஏத்தவேண்டும். அவ்வாறு ஏத்துதற்கு ஏற்ற தமிழ்ப் பாடல்கள் பலவற்றுள்ளும் அமிழ்தப்பாடலாய், வாதவூராகிய மாணிக்கவாசகர் வாய்மலரிற் றோன்றி நின்று நிலவுகின்ற திருவாசகமென்னுந் தீந்தேன், தன்னைச் செவ்வழியே பருகினோர்க்குப் பழமையாய் வருகின்ற பெரிய பிறவி யென்னுந் தளையை (பந்தத்தை, விலங்கை) நீக்கிவிடவல்லது, அல்லெல்லாம் அறுத்துவிடும்ஆற்றல்வாய்ந்தது; ஆனந்தம் முழுதும் ஆக்கிவிடும் ஏற்றம் வய்ந்தது. தேனின்கண் உள்ள தித்திப்பு, உண்டவர்க்கே உண்டாகும். திருவாசகத்தேனின் மதுர இன்சுவை ஓதுவார்க்குங் கேட்பார்க்கும் கருதுவார்க்கும் உண்டாகும். உலகத்துத்தேன் பன்மலர்களில் அற்தாகச் சிறந்து சிறிதே அகப்படும். திருவாசகத்தேன் சொன்மலர்களில் பெரிதும்ஒழுகி ஊற்றெடுக்கும். அப் பன்மலர்த்தேன் உண்ட அக்கணமே தன்சுவைதீரும் இச் சொன்மலர்த்தேன் உண்டபோதும் கண்டபோதும் கேட்டபோதும் வேட்டபோதும் உன்னும்போதும் ஒழிவி லின்சுவை கூரும். பன்மலர்த்தேன் ஓர் கால்பதம் கெடும். இச் சொன்மலர்த்தேன் எக்காலும் செவ்விகெடாமல் இதங்கொடுக்கும். பன்மலர்த்தேன் வயிற்றுக்கு உணவும் உடலுக்கு மருந்துமாம். இச் சொன் மலர்த்தேன் கருத்திற்கும் உயிர்க்கும் உணவாவதுடன் பிறவியென்னும் பெரும்

186944



பிணி தீர்க்கும் அருமருந்தாகும். இம்மட்டோ இதன் பெருமை! பத்திச்சுவையை நித்தலும் சித்தத்திற் றேக்கிடச்செய்யுமே! தித்திக்கு மணிவார்த்தை எத்திக்கும் பரவிருக்குந் திருவாசகத்தில் ஒரு வாசகத்தை யுணரினும் ஓதினும் "பத்திவெள்ளம் பாய்ந்திடும். பக்தியொன்றே முத்திக்கு மூலமாம். பத்திமலர் தூவ முத்தியாகுமே" என்றார் திருஞானசம்பந்தர். பத்திக்கடலிற் படிந்தாடி யின்புறத் திருவாசகத்தையே தினமும் ஓதுவார் முழுதுணர்ந்த மூதறிஞர். அப்பெரும் பத்தியை (அன்பை) எப்பொழுதும் அறியாத முழுமூடரும், இப்பெரும் புத்தகத்தை ஓர்கால் ஓதினாலும் ஓதக் கேட்டாலும் பத்தி வலையிற் படுவார்களே யன்றி பாழ்வலையில் வீழ்வார்களாகார்.

இங்ஙனமிருக்க மாந்தரிற் பலர் உய்வைத் தருந் தெய்வபத்தியை உள்ளத்திற்கொள்ளாது உழல்கின்றனரே. காரணம்தான் என்னோ? எனக் கழறின், அவர்கள் உள்ளத்தே தள்ளவொண்ணாப் பாவம் மிக்கிருத்தலால், எள்ளளவும் இதைச் சிந்திக்கவும் கேட்கவும் ஓதவும் சிந்தை செல்லாதென்று தெளிக.

இத்தெய்வ பக்தியைப் பெறவேண்டும் என்ற பெருந்தகையாளர்க்குத்தான் திருவாசகம் பெருவாசகமாகும்; அரும்பெறற் றேனாகும். குருடர்க்கு ஒளிபயன்படாமை போலவும், செவிடர்க்கு எவ்வகை இன்னிசையும் பயன்படாமை போலவும் அன்பை இன்பெனக் கொள்ளாத வன்பரும் துன்பருமாயுள்ளவர்க்கு இத் திருவாசகத்தின் பெருமையை எடுத்தோதினால் ஆவதென்னே! பலனொன்றுமின்று, மெய்யன்பர்களே!

எப்பொருட்கும் இறைவனொருவனுளன் என்றெண்ணும் புண்ணியர்களே! நீவிர்நமது திருவாசத்தின் பெருமையை மறவாதிருங்கள். தினந்தோறும் உள்ளங்குளிர்ந்து அதனை ஓதுங்கள்.

வடமொழியிற் சிறந்தது வேதம். இவ்வேதத்தின் மேன்மை விளம்பற்கரியது. ஆனாலும், வேதமோதினால் பத்திவிளையவில்லை. அதனை ஓதுவதைக்காட்டிலும் திருவாசகத்தை ஓதுவார்க்கே பக்தி பெருகுகின்றது. இதில் எவ்விடத்தில் எந்தப்பாடலை எடுத்தோதினாலும் பத்திரசமே ஒழுகுகின்றது. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்னும் பழமொழியும் வழங்குகின்றது. கருங்கல் மனத்தையும் கரைக்கும் ஆற்றல் இத் திருவாசகத்துக்கே உளது வேதத்திற்கும் இவ்வித ஆற்றலில்லை என்றால், திருவாசகத்தின் பெருமையைச் செப்பவல்லார் எவர்?

மாணிக்கவாசகர் என்னும் மேகம் பொழிந்த திருவாசகமழை தன்னை ஓதுவார் மனமாகிய தடாகத்தில் நிறைந்து அவர் நாவென்னும் மதகுவழியே நடந்து கேட்போரது செவி யென்னும் மடை

211, N27 SN
N34.8.3

யில்பாய்ந்து அவர்கள் உள்ளமென்னும் நிலத்தில் விதைத்த பத்தியென்னும் வித்திலே சிவம் என்னும் முளைதோன்றி வளர்ந்து கருணை மலர்ந்து முத்தியென்னும் பயனை விளைவிக்கின்றது

இத் திருவாசகத்தை அழகிய திருச்சிற்றம்பல முடையாராகிய ஸ்ரீநடராஜரே தமது அருமைத் திருக்கரத்தால் எழுதிவைத்தா ரென்றால் இதற்கு நிகரான நூலும் நிலவுலகில் வேறுண்டோ?

மறையெனப் பெயர்பெற்ற வடமொழிவேதம் சிலபகுதியாரால் ஓதற்குரியதல்ல. அதற்கு உரியவரன்றிப் பிறர் ஓதினால் ஆற்றல் கெடும் என்பர். அதனால், வடமொழிவேதம் மட்கலத்தை ஒக்கும். இத்திருவாசகத்தை அனைவரும் ஓதலாம். இதனால் இது எவர்தொட்டாலும் இழிதகவு தொடாத பொற்கலத்தை யொக்கின்றது. இதன பெருமைதா னென்னே! எம்மலர்களினும் தண்டாமரை மலரே கொண்டாடற்குரியது. அஃதேபோல் எந்நூல்களினும் திருவாசகமே தலை சிறந்தது. இதுகுறித்தே நமது நாட்டினர் இறக்குந் தருணத்திலும் திருவாசகமே படிக்கின்றனர். எப்போதும் படித்தும் கேட்டும் பயின்று வந்தால் பயன் பெரிதும் அடையலாமென்றற்குத் தடையுண்டா?

இன்சுவைக் கனியிற் கோதுண்டு. தேனில் என்ன கோதிருக்கிறது. அதுபோல் திருவாசகத்தில் எந்த இடம் சுவைதராத இடம்? பன்னூலை வருந்திக் கற்பதைவிட இந்நூலொன்றையே பொருந்திக் கற்றால் தெய்வத்திருவருள் கைவந்து கிடைக்கும். பார்மின்! பார்மின்!! பாரில் வாழ்நாள் நமக்குச் சிலநாளே யுள. அந்நாள்களை அவமே போகவிடாமல் நன்னாளாகக் கொண்டு பத்திநெறியைப் பாங்குறப் பெறுதற்குத் திருவாசகத்தில் ஒரு வாசகத்தையேனுந் தினந்தினம் சிந்தித்துய்மின்!

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெஞ்ஞான
நாட்டமுறும் மெனிலிங்கு நானடைதல் வியப்பன்றே.

வடலூர் இராமலிங்க சுவாமிகள்.

பொன்மலர்:

---

OFFICE OF THE ... 29 OCT 1934 ... MADRAS

உ

# சிறுதெய்வங்களும் சீவவதையும்.

(கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்.)

"அஹிம்ஸா பரமோ தர்மா" என்னும் வேதவாக்கை யடிப்படையாகக் கொண்டு போற்றும், நமது புண்ணியபூமியாகிய பாரதநாட்டிலே, இன்னும் தேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுக்கும், அநாகரீக மூடவழக்கம் நிலைத்திருப்பது மிகக் கொடுமையினும் கொடுமை. தேவதைகள் உயிர்ப்பலியை விரும்புவதாக நம்புவது மக்களின் அறியாமையே. மாரி, காளி, முனியன், கருப்பன், இருளன், மாடன், காட்டேரி என்னும் சிறு தெய்வங்களிடத்துக் குறைகளை முறையிட்டு ஆடு, கோழி, பன்றி பலியிடுகிறேன் என்று வாயில் வந்தவாறு சொல்லிப் பிரார்த்தனை செய்து தாங்கள் நினைத்த அக்காரியத்தில் ஏதோ ஒன்று, விதிவசமாய் எக்காரணத்தைக் கொண்டு முடிவடைந்தாலும், எல்லாம்வல்ல தெய்வத்தின் இன்னருளென்றுணராராய்த்தாங்கள் வேண்டிக்கொண்ட தெய்வத்தின் கிருபையினால் தான், எண்ணிய காரியம் முடிந்ததெனக் கருதி, அவ்வேழைப் பிராணிகளை அத்தெய்வ ஆலயங்களினருகிற் கொண்டுபோய், சுயநலமிக்க பொய்வேடப் பூசாரிகளாகிய கொலையாளிகளிடம் கொடுத்து எள்ளளவும் இரக்கமின்றிக் கொலைபுரிந்து கொலையுண்ட அப் பிரேதங்களின் தலைகளைத் பூசாரிகளுக்குக்கொடுத்து, உடல்களைத்தம்மில்லங்களிற் கொண்டுபோய் சுற்றம் சூழ விலாப்புடைக்க வுண்டுமகிழ்கின்றனர்.

இக்கொலைப்பாவம் இம்மூடர்களை யல்லவோ சாரும். "புலையுங் கொலையுங் களவுந் தவிர்" என்னும் ஔவையார் நீதிவாக்கியத்தைக் கேட்டுணர்ந்து போற்றாத இவர்களினறியாமைக்கு மிகவும் வருந்தநேருகின்றது. உயிர்ப்பலியை எத்தெய்வமும் ஒருக்காலும் விரும்புவதில்லை, ஏற்றுக்கொள்வது மில்லை. தன்னுயிரைப்போல மன்னுயிரை நினைத்துக்கொலைபுரியா திருத்தல்வேண்டும், கொன்று தின்னாதிருத்தல் வேண்டும், என்பனவற்றை வலியுறுத்தி,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி—னொன் றனுயிர்
செகுத் துண்ணாமை நன்று"

"கொல்லான் புலாலை மறுத்தானைக்—கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க—தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

எனத்திருவள்ளுவரும்,

"கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

என, தாயுமானவரும் பிறரும் கூறியுள்ள அருமைத்திருவாக்குகளைப்போற்ற வேண்டாமா? சைவ வைணவ, அத்துவைத, சமயங்களும், உயிர்வதையையும், புலாலுண்ணுதலையும் கண்டித்துத் தடுக்கின்றன. "கொலைப் பாவத்துக் கஞ்சுபவனைக் கூற்றமுமஞ்சும். அவன் தேவர்களுக் கொப்பாவான். அவன் வாழ்க்கை எஞ்ஞான்று மின்பமாகவே யமையும். துறவியைக் காட்டிலு மவன் சிரேட்டனாவான்" என்று நூல்கள் நுவல்கின்றன. கொலை செய்தலினால் மிகுந்த பாவமும், மீண்டுமீண்டும் புவியிற் பிறத்தற்கேதுவும், வறுமையும், பிணியும், நரகமும் சித்திக்கும்.

ஆகையால் ஜீவகாருண்ய மென்னுஞ் சிவபூடணத்தையணிந்து யாதொரு ஜீவனுக்கும், கொலைசெய்தல், துன்புறுத்தல் முதலிய இம்சைகளைச் செய்யாதிருக்க வேண்டும். அரிய மானிட யாக்கை பெற்ற நாம் நன்மை தீமை பகுத்தறியாது, சீவ வதைசெய்ய எத்தனிப்பது, கையில் விளக்கை வைத்துக்கொண்டு கிணற்றில் விழுவது போலாம். நமது நாட்டுமக்கட்குக் கல்வியும் சமயஞானமும், நல்லொழுக்கமும், கடவுள் வழிபாட்டு முறையும், போதிக்கப்படாமையாலே, குருடர்கள் போன்று இத்தகைய பழிபாவங்கட்கும் பொருளற்ற பழக்கவழக்கங்கட்கும், செடல்குத்தல், அலகுபூணல் முதலிய கொடுஞ்செயல்கட்கும் ஆளாகின்றனர். மடாதிபதிகளும் தம்பிரான்களும், ஜீயர்களும், ஆச்சாரியார்களும் என்செய்கின்றனர். போதிய பொருள்வருவாயும் சௌகரியமும் இருந்தும் இவர்கள் ஏன்! கவனஞ் செலுத்தவில்லை. இவர்கள் முன்வரின், நமது தேசத்தில் உயிர்ப்பலி போன்ற கோரச் செயல்களையெல்லாம் எளிதில் ஒழித்துவிடலாம். இன்னும் எதிர்பாராத எத்தனையோ நலங்களையும் நாம் அடையலாம். கிருஸ்துவ சமயத் தலைவர்கள் பல்லாயிரமைல் கடல்கடந்து வந்து நமது நாட்டில் எம்முறையில் தங்கள் சமயத்தொண்டாற்றுகின்றனர் என்னும் உண்மையை நமது சமயத் தலைவர்கள் அறியார்களா? பிறநலங்கருதாச் சுயநலப் புலிகளாயிராமல் இனியேனும் முன்வந்து சீவவதையைத் தடுத்து, தெய்வவுண்மையையும் வழிபடு முறையையும் மக்கட்கு உணர்த்தும் வண்ணம், இறைவர் திருவருள் புரியவேண்டுவோம்,

---

## ஊக்கம்.

ஊக்கம் என்பது தனக்கு நன்மை உண்டாக்கக் கூடிய காரியங்களைச் செய்து நிறைவேற்ற வேண்டுமென்னும், மனவெழுச்சியாம். மனச்சோர்விலா முயற்சியே ஊக்கமெனப்படும். உள்ளமிகுதியெனவுமமையும். அதாவது மனம் தொழில் செய்தலிலே எழுச்சியை யுடைத்தா யிருத்தலாம். ஊக்கம், முயற்சி, உற்சாகம், வலி என்பன ஒரு பெயர்ப் பன்மொழிகள். ஊக்கமென்னும் மனஓங்கலில்லார், அதிக செல்வவான்களா யிருந்தாலும் சிறப்படைய மாட்டார்கள். அவர்கள் எடுத்தகாரியங்களும் முற்றுப்பெறாவாம். இதுநோக்கியே நமது திருவள்ளுவநாயனார்,

"உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று.

என்று கூறியுள்ளார். ஒருசமயம் ஆரம்பித்த காரியம் முடிவுபெறாவிட்டாலும், அதனால் மனஞ்சலித்துத் தளர்ந்து போகாமல் 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் உறுதியுடன் நன்முயற்சிகொண்டு ஆற்றல் வேண்டும். இதனை வலியுறுத்தியே நமது ஔவைப்பிராட்டியாரும் 'ஊக்கமது கைவிடேல்' என்று கூறியுள்ளார். மனஓங்கலாகிய ஊக்கமில்லாதவர்களை மரப்பொம்மைகள் என்று அறிவுடையோர் கூறுகின்றனர்.

ஊக்கமானது உலகிலுள்ள வீரர்களுக்கும், அறிவுடையோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், செல்வவான்களுக்கும், தமதுஉயர்குடிப்பிறப்பினாலாவது, ஐசுவரியத்தினாலாவது, சரீரபலத்தினாலாவது செய்துமுடிக்க வொண்ணாப் பெருங் காரியங்களையும் எளிதில் முற்றுப்பெறச் செய்யும் வன்மையுடையது. ஆதலால், ஊக்கமே முக்கியசாதனம். 'ஊக்கமுடைமை யாக்கத்திற் கழகு' என்பதும் இதுபற்றியே கூறப்பட்டதாமெனக. ஊக்கமுடையார் மாட்டே செல்வமானது நிலைத்து வளருமென்பது நமதுபண்டைப் பெரியோர்களின் கொள்கை. உண்மையுமஃதே. நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்,

"ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை."

என்னுந் திருக்குறளில் மனவெழுச்சி யுடையவனிடத்துச்செல்வம் தானே சென்று சேரும், என்று கூறுகிறார். ஆகையால் மக்கள் யாக்கையிற் றோன்றிய நாமெல்லோரும் சோம்பலைவிடுத்துத் தளரா ஊக்கமுடையவர்களாய்த் திகழ்தல்வேண்டும். யானையானது உருவத்தில் எல்லாமிருகங்களைக் காட்டிலும் பெரியதாயிருந்தாலும், அது தன் மனதில் ஊக்கமும் உறுதியும் இல்லாததினால், அதை விடப் பன்மடங்கு உருவத்தில் மிகச்சிறியதாகிய புலிக்கு அஞ்சுகிறது.

'ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.'

என்ற திருக்குறளுக் கேற்ப, எடுத்தகாரியத்தைச் சோர்வின்றி நடத்தும், மனவூக்கமிக்கார், ஊழ்வினைவலியையுங் கடந்து காரிய சித்தி பெறுவரென்பதி லெட்டுணையுமையமின்று. ஜேம்ஸ்வாட், ஜியார்ஜ்ஸ்டீவன்சன் போன்ற ஆங்கில விஞ்ஞான சாஸ்திரிகள் தமதிடையறா வூக்கத்தினாலன்றோ? நீராவியந்திரம், இருப்புப்பாதை மோட்டார், ட்ராம்கார், முதலியபரோபகாரமான அரியசெயல்களைச் செய்து முடித்திருக்கின்றனர்.

நமது நாட்டில் பல்லாயிர மாண்டுகட்கு முன்னர், அரசாயிருந்து மணிமகுடம் புனைந்தாட்சி செய்த, விசுவாமித்திரரானவர், தனது நாடுநகரம் மனைவிமக்கள் அரசு முதலியனவகளைவிட்டு, கானடைந்து, மிகமனவூக்கத்துடனரிய தவமாற்றினதாலன்றோ? 'பிரமரிஷி' எனப் பெற்றனர். ஐந்துவயதுள்ள துருவன் இளைத்தலில்லா மனவூக்கத்தினா லன்றோ? கண்ணபிரானைக் கண்டு மேன்மைமிக்க பாக்கியம் பெற்றனன். நமது காரைக்காலம்மையார் சோர்விலா வூக்கத்தினாலன்றோ? தலைபால்நடந்து கைலாயத்தையணுகினர்.

பண்டைக்காலத்தில் நம் நாட்டினரிடம் ஊக்கமே நிரம்பியிருந்தது. அதனால் நமது நாடு மிகச்செழிப்புற்றுச் செல்வம் நிறைந்து மேன்மையாய் விளங்கியிருந்தது. கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலியனவைகள் விருத்தியடைவதற்கு மக்களின் மனவூக்கமே முக்கிய காரணம். தற்காலம் நமது நாட்டினர்பால் ஊக்கம் மிகவும் குன்றியிருக்கின்றது. அதனால் நமது தேசம் வறுமை வாய்ப்பட்டுத் துன்பமடைகின்றது. ஊக்கம் மிடியகற்று மென்பது சிந்திக்கற்பாலது. சிறிது காலத்துக்குமுன் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருந்த ஜப்பான் தேசமானது, தனதுமுயற்சியினாலேயே வல்லரசுகளில் ஒன்றாய்ச் சமத்துவம் பெற்று, தற்காலம் மிகவும் மேலான நிலைமையிலிருந்து வருகிறது. விசுவாமித்திரர், விளைத்த பலகொடுமைகளையும் சகித்து ஊக்கமேற் கொண்டதனா லன்றோ சூரிய குலத்தோன்றலாகிய அரிச்சந்திரன் சத்தியகீர்த்தி என்னும் உத்தீமனாக உலகமெங்கும், தன்புகழை நிறுவினான். வான்மீகியானவர், தன்னை வன்மீகம் மூடிப் புற்றுவளர்ந்த நிலையிலும் மனந்தளராது பல்லாயிர வருடம் தவமுயன்றதனாலன்றோ மகிமை வாய்ந்த மகரிஷியாகி வான்மீகி என்ற திருநாமம் சூட்டப்பெற்றனர்.

நேயர்களே! காரியங்களை எளிதில் சித்திக்கச் செய்யும் ஊக்கத்தைக் கைவிடாதவர்களாய் நாம் இடையறா முயற்சியி லீடுபட எல்லாம்வல்ல இறைவன் றுணைபுரிவாராக.

> ஆக்கமிங் கொருவரா லனுக வேண்டுமே
> லூக்க முண்டாவ ரேனுறுவர். ... ... (கந்தப்புராணம்)

வை. ச. இராமலிங்க முதலியார்.

உ

# சிவபெருமான் நிருவாணியாய்த் தாருகாவனத்தில் போகலாமா என்பதற்கு நியாயம்.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்களவர்கள்-)

> "முன்புதா ருகவனத்தின் முனிவரா யாருமீசற்
> கன்பில ராகிவேள்வி யளப்பில புரிந்துதாமே
> இன்புறு முத்திதன்னை யெய்துவா னுன்னியங்கந்
> துன்புற வாளாநோற்றுத் துணிவினொ லொழுகலுற்றார்."

தாருகாவனத்து முனிவர்கள் முன் சிவபத்தி யுள்ளவர்களாயிருந்தவர்கள், பின் சிவபிரானை மறந்து பாட்டாசாரியன் மதம்பற்றிச் சிவபத்தியில்லாதவர்களாய், முத்தியைக் கொடுப்பான் ஒரு தலைவனின்றி முத்தியைப் பெறும்படி நினைத்துச் சோமயாகமுதல் அஸ்வமேத யாகமீறாகவுள்ள யாகத்தைச் செய்தால் மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் அந்தக்கரணமே முத்தி கொடுக்குமன்றிக் கன்மத்தை யேற்றுப் பலந்தரும் ஒருகடவுள் இலரென்றும், கன்மத்தைச் செய்தற்கும் அதன்பயனை அநுபவித்தற்கும் தாமே சுதந்தரரன்றித் தம்மை நடத்தும் உயிர்க்குயிராகியவர் ஒருவரிலரென்றும் கொண்ட விபரீத புத்தியுடையவர்கள். தம்மினும் மேலானவர்கள் இலரென்னும் மதம்பிடித்தவர்கள். ஆதலின், அவ் விபரீத புத்தியைமாற்றி நல்ல ஞானத்தைக் கொடுத்தற் பொருட்டு.

> "ஒழுகிய வேலைதன்னி லுயிர்க்குயி ராகியுற்றோன்
> பழுதினை யகற்றித்தன்னோர் பாங்கரி லுமையாண்மேவ
> விழுமிய கயிலைநாப்பண் வீற்றிருந் தருள்வோனங்க
> ணிழுதையர் புரியுநீர்மை யாவையு முணர்ந்தானன்றே."

கைலாசத்திருந்து தூரமாய் தேவதாரு வனத்தில் நிகழ்ந்த சமாசாரத்தை யெப்படி யறிந்தாரென்னும் ஆட்சேபம் நிகழாமைப் பொருட்டன்றோ 'உயிர்க்குயிராகியுற்றோன்' என்றார்.

நிஷ்களராய்த் தமது அருட்சத்தி காரியமாய் சகல வடிவத்தைக் கொண்டு கயிலாச மலையில் வீற்றிருப்பது ஆன்மாக்கட்கு அருள்புரியுமாறென்பது போதரவே "தன்னோர் பாங்கரில் உமையாள் மேவ வீற்றிருந்தருள்வோன்" என்றார்.

> "நராரியி லுரிவைநீத்து நக்கனே யாகிமுக்கட்
> பராபரன் சூலத்தோடு பலிக்கல னங்கைகொண்டு
> முராரிதன் பாங்கர்செல்ல முனிவருக் கிருக்கையாகத்
> தாதல மதிக்கநின்ற தாருகாவனத் திற்புக்கான்."

முக்கட் பராபரனென்ற பெயரடைகளினால் சிவபிரான் தேவதாருவனத்திற்குச் சென்றமை தற்பயன் குறித்தன்று; தமது

பிள்ளைகளாகிய ஆன்மாக்களைப் பக்குவராக்கி முத்தியிற் சேர்த்தல் வேண்டுமென்னும் அருள்காரணமாகவே என்பதாம். எங்ஙன மென்றால் நமது ஊனக்கண்ணிரண்டும் போலாகாது நெற்றிமேல் நோக்கிய ஞானக் கண்ணுடையராகலானும் என்க. நரசிங்கத்தின் றோலுடையை நீக்கி முன்னொரு காலத்திலே விஷ்ணு நரசிங்கவடிவங்கொண்டு இரணியனைப் பிளந்து பின் உலகத்துக்கு எல்லாங்கெடு விளைத்துத் தருக்குற்றபோது சிவபிரான் அந்த நரசிங்கத்தைப் பிளந்து அதன்றோலையுரித்து வஸ்திரமாக அணிந்தாரெனச் சரித்திர முண்மையின் நாரியினுரிவை நீத்தென்றார்.

எனவே, இச் செய்யுளினால் சிவபிரான் தாருகாவனத்திற் சென்றபோது நிர்வாணியாயும் திருக்கரத்தில் சூலத்தையும் பிட்சா பாத்திரத்தையுங்கொண்டு சென்றாரென்பதுபெற்றாம். அரையில்வஸ்திரமில்லாது நிர்வாணியாயும் சூலத்தையும் பிட்சாபாத்திரத்தையுங் கொண்டு சென்றதற்கு நியாயம் மறுபத்திரிகையிற் காட்டுதும்.

---

## சங்கரஸம்ஹிதை பிரகடனம்.

ஸ்காந்தத்திலுள்ள, சங்கரசம்ஹிதை. என்னும் புராணம், வடமொழியிலும் அதற்கு நேரான தமிழ்மொழி பெயர்ப்புடனும் திருவையாறு ஸ்ரீ அனந்த வைத்தியநாதசிவன் என்பவர்களால், நந்தனவருடத்தில் அச்சிடப்பட்டுள்ளது. தற்காலம் இப்பிரதிகள் கிடைப்பது மிகவும் அருமையாயிருப்பதைக் கருதி இரண்டாமுறையாக அவர்கள் பதிப்பித்த மாதிரி கிரந்தத்திலும், தமிழிலும் தனித்தனியாக அச்சிட உத்தேசித்திருக்கின்றோம்.

இச்சங்கர ஸம்ஹிதை உபதேசகாண்டத்தில் 83-வது அத்தியாயம் முதல் நான்கு அத்தியாயங்கள் கிடைக்கவில்லை, பிரதியுடையார் அனுப்பினால் மறுமுறை அச்சிடுவோம். என அப்புத்தகத்தின் 724-ம் பக்கத்தில் காட்டியுள்ளார்கள்.

ஈண்டுள்ள சிலபிரதிகளையும், அயலூர்களிலிருந்துவந்த சில பிரதிகளையும் பார்த்ததில் ஒன்றுக்கொன்று மாறுபட்டுள்ளன.

ஆகையால், சங்கர ஸம் ஹிதை ஏட்டுப்பிரதி வைத்திருப்பவர்கள், உபதேச காண்டத்தை மட்டிலும் எழுதி அனுப்பியாவது, வந்து எழுதிக்கொள்ளும்படி. தெரிவித்தாவது உபகரிக்க வேண்டுகின்றோம்.

ஆதி சைவமஹாசபை,
கமலகணபதி,
திருச்செங்கோடு.

# சித்துஞ் சடமும்.

(பொன்னேரி பிர்ம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.)

இவ்வுலகம் ஒரு முதற்காரணத்தினின்று வெளிப்பட்ட காரியம். அக்காரணத்தைச் சித் என்னும் மாயாவாதம். சடம் என்னும் நாஸ்திகம். இன்னும் மாயாவாதம் அச் சித்தை ஏகதேசசித் என்னாது; பூர்ணசித் என்றே சொல்லும். நாஸ்திகம் அச்சடத்தை ஏகதேச சடம் என்னாது; பூர்ணசடம் என்றே சொல்லும். ஒருபொருளை ஏகதேச சித்தென்பதும் ஏகதேச சடமென்பதும் ஒன்றே. மாயாவாதமும் நாஸ்திகமும் அச்சித்துக்குஞ் சடத்துக்கும் ஏகதேசத்வங் கூறாமையாற்றான் வெவ்வேறு மதங்களாயின: கூறின் ஒரு மதந்தான்.

சடத்துக்குத் தன்னிற் கீழிட்ட தன்மை காரணாவஸ்தையிலுங் காரியாவஸ்தையிலுங் கிடையாது. வேண்டுமானால் நாஸ்திகப் பிரகாரம் காரியாவஸ்தையில் அதற்குச் சித்வமுண்டாகலாம். அப்படியே சித்துக்கும் தன்னிற்கீழிட்ட தன்மை எந்த அவஸ்தையிலுமிருக்கக்கூடாது. வேண்டுமானால், மேலிட்டதன்மை யுண்டாகலாம். ஆனால் மாயாவாதப்பிரகாரம் காரியத்தில் அது சடத்வமும் ஏகதேசசித்வமும் அடைகிறது. பூர்ணசித்வம் உயர்ந்தது. சடத்வமும் ஏகதேச சித்வமும் இழிந்தவை. நாஸ்திகத்தின் சடத்திலுமில்லாத இழிவு மாயாவாதத்தின் சித்துக்குநேர்வதால் மாயாவாதம் நாஸ்திகத்தினுங் கடைப்படும். ஆகவே, சடவுலகின் உபாதான காரணம் சித்தாதல் கூடாது.

உலகிற்காணப்படுவது ஏகதேசசித். பிரத்தியக்ஷத்துக்கு வராத பூர்ணசித் பிரஸ்தாபமும் உண்டு. ஆனால் நாஸ்திகம் பூர்ணசித்தை உண்டென்னாது. ஆகலின் அதன்சடம் காரியத்தில் ஏகதேச சித்தாகத்தான் மாறலாம். ஆனால், காரியாவஸ்தையிலுள்ள ஏகதேசசித்துக்கள் பூர்ணசித்வத்தை யடைய விரும்புதல் பிரத்தியக்ஷம். ஒரு விருப்பமுமில்லாத சடம் ஏகதேச சித்தாகப் பரிணமிக்குமானால் பூர்ணசித் ஆகவேண்டுமென்று விரும்புகிற ஏகதேச சித் மட்டும் ஏன் பூர்ணசித்தாக மாறாது? மாறவே செய்யும். ஆகையால் நாஸ்திகம் பூர்ணசித்தின் உண்மையையும் அங்கீகரித்தல் அவசியமாயிற்று. அஃதங்கீகரிக்கப் பட்டுவிட்டால் ஏனைச் சடங்களும் ஏகதேசசித்துக்களும் அப்பூர்ணசித்தின் வசத்திலுள்ளன வென்பதுஞ் சத்தியமாகி நாஸ்திகம் நாசமாம். ஆகவே, சித் பிரபஞ்சத்தின் உபாதானகாரணம் சடமாதல் கூடாது.

இதனால், பூர்ணசடம், ஏகதேசசித், பூர்ணசித் என்னு மூன்றும் ஒன்றுமற்றொன்றாக மாறாவென்பது ஸ்திரமாயிற்று. மூன்றுந் தனித்தனி வஸ்துக்கள். பூர்ணசடகாரிய வுலகுக்குமட்டும் பூர்ணசடம் முதற்காரண மென்பதறிக. பூர்ணசடம் பாசம். ஏகதேச சித் பசு. பூர்ணசித் பதி.

---

# சிறுவர் தீப்பழக்கம்.

(பொன்மலர், புதினத்தாளில் திரு. கந்தசாமியவர்கள்.)

பிள்ளைகள் குணங்களைப் பள்ளியிற் காணலாம். சில பிள்ளைகள் வீட்டுப் பழக்கங்களைப் பள்ளிக்கூடத்திற் காட்டுவார்கள்; சிலர் பள்ளியிற் பழகியவற்றை வீட்டிற் காட்டுவார்கள். சிறுவர்கள் விளையாட்டாகவே, திருடுதல், பொய்கூறல், வஞ்சித்தல், பீடி, சிகரெட் பிடித்தல், கிறுது பேசுதல், பிறரைப் பழித்தல், கெட்ட வார்த்தைகளை வெட்டவெளிச்சமாய்ப்பேசுதல் அவைகளைச் சுவரிலும் பலகையிலும் எழுதுதல் முதலிய தீய காரியத்தை வெகு சுலபமாகப் பழகிக்கொள்கிறார்கள். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றபடி இளமைப் பழக்கமே முதுமையிலும் முன்வரும். இப் பழக்கங்கள் சேர்க்கையினால் வருகின்றனவேயன்றி, இயற்கையில் இல்லை. ஆகையால், இளமையில் நல்ல பழக்கத்தைப் பிள்ளைகள் பழகி வரும்படி பெற்றோர்கள் கவனிக்கவேண்டியது கடமையாகும். களையைக் களைந்து பயிரை வளர்ப்பதுபோலத் தீச்சார்பகற்றி நற்சார்பில் வளர்ந்துவரப் பிள்ளைகளைப் பெரிதும் கவனிக்கவேண்டும்.

பிள்ளைகளைப் பெற்றுவிட்டோம்; அவர்கள் கேட்டவற்றை வாங்கிக் கொடுத்துவிட்டோம்; படிக்கவைத்தோம்; கலியாணமும் செய்துவைத்துவிட்டோம் என்ற மட்டில் பெற்றோர்கள் களிப்படைகிறார்கள். பிள்ளைகள் தீயவழியிற் போயுழலாமல் தாய் தந்தையர் எடுத்துக் கொள்ளவேண்டிய முயற்சிகள் சாலப் பலவுள. பெற்றோர்கள் அடிக்கடி தம்பிள்ளைகள் நடக்கையைக் கவனிக்காவிட்டால் இளமையில் வளையாத மூங்கில்போல் தங்களிஷ்டப்படி நடந்து கெட்டவழியிலேசென்றுகெடும் பிள்ளைகள் மிகப் பலராவர். சில பெற்றோர் உபாத்தியாயர் மீது இப்பொறுப்பை வைக்கின்றனர். உபாத்தியாயர் கற்பிக்கும் பாடங்களையெல்லாங் கருத்தில் வைக்காமல் கட்டிச்சுருட்டிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு, அவரிடமே குறும்புசெய்யுங் குணமுடைய பிள்ளைகளை உபாத்தியாயர் திருத்துவது எப்படி? அதிலும் தற்போது உபாத்தியாயரைத் தாழ்த்தித் தம்மை யுயர்த்துந் தகுதியில் தலைவருள்ள பள்ளிக்கூடம் போன்ற கலகமுள்ள இடத்தில் உபாத்தியாயருக்குப் பிள்ளைகள் பயந்து நடப்பது கஷ்டமாக இருக்குமல்லவா? ஆகையால், சிறுவர் தீப்பழக்கத்தைவிட்டு நற்பழக்கத்தைத் தொட்டு நடக்கும்படி கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டியது பெற்றோர்கட்கே பொறுப்பாகும். பிள்ளைகளைச் "சான்றோனாக்குதல் தந்தைக்குக்கடனே" என்று நாலோருங் கூறி யிருக்கின்றனர்.

"இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும் தீதேயாயினும் அது மரணபரியந்தம் அவனைத் தொடரும்"

"பழக்கம்பெரிது பாறையினுங் கோழி கிளைக்கும்"

"பல்லூழிகாலம் பயின்றதனையர்ச்சித்தால்நல்லுணர்வுசற்றே நகும்"



# மனோலய விளக்கம்.

(ஐயங்கார்குளம் திரு. அ. க. பொன்னுச்சாமிமுதலியார் அவர்கள்.)

மனத்தை யடக்க மனந்துணையாகும்
பினைத்துணை யின்றது பெற்றன னாயிற்
றனிச்சிவமே யொரு தானென வாழ்வ
னினைத்து மறந்து நிலத்துழ லானே.

விரிந்தநெஞ்சக் கருவியாம் விடயமுணர விரியாம
லொருங்குநெஞ்சங் கருவியாந் தன்னையுணர வொருங்காமல்
விரிந்தநெஞ்ச முடையவனை விடாது பிறவியென்றுணர்க
வொருங்குநெஞ்ச முடையவனை யுறாதுபிறப் பென்றுணர்கவே.

என்பது பிரபுலிங்கலீலை. மனோலயம் என்பதுதான், பிறவியையொழிக்கு மருந்தென்பது தேற்றம். ஆயினும், மனமடக்க லெளிதல்ல முற்றுந்துறந்த முனிவராமெமது தாயுமான சுவாமிகளும் "பாழான என் மனங்குவிய வொருதந்திரம் பண்ணுவதுனக் கருமையோ" எனவும் "சிந்தையையடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது, எனவும் "உறவுடலை யெடுத்தவரிற் பிரமாதியேனு முனையொழித்து தன்னாற் கறவுமரி தரிதன்றோ இகபாமுமுன்னையன்றி யாவதுண்டோ" எனவும்,

"சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே." எனவும் கூறினர்.

மனமானது அந்தக்கரணங்களுள் ஒன்று. ஆன்மா தன் இச்சா ஞானக்கிரியைகளைச் செலுத்துதற்கு இம் மனத்தையே முக்கிய துணைக்கருவியாகக் கொண்டிருக்கின்றது.

ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகள் புத்தித் தத்துவத்தையடைந்துபுறத்திலே செல்லும்போது மனமானது அவற்றோலேவப்பட்டுப் புறத்திலுள்ள ஞானேந்திரியங்களாலுங், கர்மேந்திரியங்களாலும், முறையே வந்த அறிவையுந் தொழிலையும் உள்நின்றுவாங்கிப் புத்தியிற்சேர்க்கின்றது. பின் ஆன்மா அவற்றோடு தொடர்பு படுகின்றது. இதனை விரிக்கின் ஆன்மா ஞானேந்திரியங்களால் புறத்தே யுள்ள சத்த-பரிச-ரூப-ரச-கந்தங்களாகிய விஷயங்களை நுகர்தற்கும், கர்மேந்திரியங்களால்புறத்தேயுள்ள, வசன-கமன-தான- விசர்க்க ஆநந்தங்களைச் செய்தற்கும் மனமே துணையாக இருக்கின்றது. (உதாரணமாக) கண்ணேந்திரியத்தினால் காணப்பட்ட ஒருவிஷயம் ஆன்ம அறிவையடைய வேண்டுமானால், மனமே கண்ணினிடமாக அதனை வாங்கி உள்ளே கொண்டுபோய் புத்தித்தத்துவத்தில் சேர்க்கின்றது. புத்தித் தத்துவம் அதைவாங்கி ஆன்மவறிவிற் புலப்படுத்துகின்றது. இவ்வாறே ஆன்மாவின் அறிவை வெளியில் விடுதற்கும் வெளியிலுள்ள விஷயங்களை ஆன்மாவின் அறிவிற் சேர்த்தற்கும் இடையில் நின்று துணைசெய்வது மனம் என்னும் அந்தக்கரணமேயாம்.

பிரபுலிங்கலீலை,

அந்தக்கரண சத்தியேயறிவை யறிதற் சாதனமவ்
வந்தக்கரண சத்திதனக் கறையுங் கருமமாரணங்க
ளந்தக்கரண சத்திதானுவ தவாவற் றிடுதலே
யந்தக்கரண சத்தியினு லடைவன் பிண்டப்பெயரன்றே.

என்றார்; சிவானுபூதிப் பெருஞ்செல்வரும் நுண்மாண் நுழைபுலமிக்க, கற்பனைக்களஞ்சிய திப்பியப் புலவருமாகிய சிவப்பிரகாசர்.

இதனால் ஆசையொழித்து மனமடக்குதல் பிறவிநோய்க்கு மருந்தென்பது தேற்றம். இம் மனத்தின் சம்பந்தம் இல்லாவிட்டால் ஆன்மஅறிவு உலகிலுள்ள விஷயங்களைக் கவரமாட்டாது; உலகிலுள்ள விஷயங்களும் தாமே யான்மாவையடையமாட்டா. இதனாற்றான் மனத்திலேயாவும் தங்கியிருக்கிறதென்றும், மனமே பந்தத்திற்கும் மோட்சத்திற்கும் காரணமென்றும் பெரியோர்கூறுவர்.

## பிரபுலிங்க லீலை.

கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை, யெடுக்க வல்லது மிம்மனமென்றதை
யடக்க வல்ல வினைய பவக்கடல், கடக்க வல்லவ ருவன்கடிதரோ.
மனமொருத்தன்வசப்படுமேலவன், பினைவருத் தும்பிறப்பையடைந்திடான்
மனமொருத் தன்வசப் படாதோடுமே, னனிபிறப்பிடைநாளுஞ்சுழலுமே.
ஆயின் மிக்கோ ரரிய செயலெலா, நேயமிக்க மனத்தை நிறுத்தல் காண்.

என்பவைகளாலும் மனமடக்கம் அவசியமென்பது தேற்றம். மனமானது எக்காலத்தும் இருதயத்தையே தனக்கிடமாகக் கொண்டு வாயுவைப்போல அசைந்து கொண்டிருக்கிறது. அதுவிஷயங்களைப் பொருந்தி நின்ற இச்சையையே தனக்கு வடிவமாகப் பெற்று வேண்டின தொன்றிலேநினைத்து நிற்கிறது. இந்திரியங்களைக் கலங்கச்செய்வதோடு விஷயங்களையுங் கெட்டியாகப் பற்றுகிறது. இதற்கு உள்ளும் புறம்பும் வடிவின்றாம். இத்தகைய மனம் இருவகைப்படும்; ஒன்று உள்ளே சங்கற்ப விகற்பங்களைச்செய்வது. மற்றொன்று புறத்தே இந்திரியங்களுக்குப் புசிப்பைக் கொடுப்பது. அன்றியும் சுத்தமனம், அசுத்தமனம் என இரண்டு வகைப்படும்.

## சுத்தமனமாவது.

ஒடும்பொன்னுமுறவும்பகையுமோர், கேடுஞ்செல்வமுங் கீர்த்தியு நிந்தையும்,
வீடுங் கானமும் வேறற நோக்குதல், கூடுந் தன்மை கொளுமன நன்மனம்.

## அசுத்தமன மாவது.

மன்னு காம வெகுளி மயக்கமென், றின்ன கூடி யெறிவளி முற்சுட,
தென்ன வாடுமியன் மனந் தீமனந், தன்னை யாருந் தடுக்கத் தகாதரோ.

என்றாங்கு சுத்தமனமானது புறத்தே யுள்ளவிஷயங்களைப்பற்றாது தானே தனித்து நிற்பது; அசுத்தமனம் அவற்றோடு கூடிக்கலந்திருப்பது. இவ்வாறு தனித்து நிற்றற்கும் விஷயங்களோடு கலந்திருத்தற்கும், மனமே காரணமாதலால் மோட்சத்தை விரும்பும் ஒவ்வொருவரும் தள்ளற்பாலதாகிய பந்த அறிவையும், கொள்ளற் பாலதாகிய மோட்சஞானத்தையும், பெறவேண்டியது, அவசியமென்றேற்படுகின்றது. ஆதலால், சுத்தஅசுத்தமனங்களின் நிலைமைகளைத் தெரிந்துகொள்ளுதல் யாவர்க்குமின்றியமையாததாம்.

## ஆன்மாவுக்குப் டந்தமுண்டாகும்வழி.

யாதெனில்! மனமானது மெய்-வாய்-கண்-மூக்கு-செவி என்னும் ஞானேந்திரியங்களை இயக்கி வியாபரிப்பதினால், புறத்தேயுள்ள பஞ்சபூதங்



களின்குணங்களாகிய 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்வகை தெரிவான் கட்டே யுலகு' என்ற உத்தரவேதத்தின்படி ஐந்து விஷயங்கள் மனத்தின்வாயிலாக ஆன்மாவைப் பொருந்துதலும், புண்ணியபாவகர்மங்கள் ஆன்மாவை அடைதலுமாய் ஆன்மாவுக்குப் பந்தமுண்டாகின்றது. இந்தவிஷயங்களை ஆன்மா விருப்பத்தோடு அனுபவிக்கும்போது அவை சுகமெனவும், வெறுப்போடு அனுபவிக்கும்போது அவை துக்கமெனவும் எண்ணப்படுகின்றன. இதனால் மனத்தின் சங்கற்ப விகற்பங்களே, சுகதுக்கங்களுக்குக் காரணமாகின்றன. மேலும் மனமானது வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் ஆகிய கர்மேந்திரியங்களோடு சார்ந்து அவற்றை இயக்காதொழிந்தால் கர்மேந்திரியங்களின் தொழில்களாகிய வசன, கமன, தான, விசர்க்க. ஆநந்தம், என்பன, ஒருபோதும் நிகழா; அவை நிகழாதபோது கர்மங்களைக் கர்மேந்திரியங்கள் செய்யவுமாட்டா. இதனால் மனத்தின் சங்கற்ப விகற்பங்களே இவற்றிற்குக் காரணமாகின்றன. இப்படி மனமே புண்ணிய பாவங்களைச் செய்தற்கும், கர்மப்பயனாகிய இன்பதுன்பங்களை அநுபவிப்பதற்கும் காரணமாய் நிற்கின்றது. அதனால் இம்மனத்தின் கொடிய செயலைக்கண்டு அறிவுடையோர், 'உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம், எண்பது கோடி நினைந்தெண்ணுவன' என்று அஞ்சி நடுங்குவர்.

ஸ்ரீதாயுமான சுவாமிகளும்,

"பொன்னிலே பணிபோலும் மாயைதருமனமே யுன்புரைகள் தீர்ந்தாய்
லென்னினோ யான்பிழைப்பேன் எனக்கினியாருன் போல்வா ரில்லையில்லை
உன்னிலோ திருவருளுக் கொப்பாவாய் என்னுயிர்க்கோ ருறவுமாவாய்"
"வறிதிலுன்னை அசத்தென்னல் வழக்கன்று சத்தெனவும் வாழ்த்துவேன்என்
சிறுமை கெடப்பெருமையி னின்சென்ம தேயத்தி செல்லல்வேண்டும்".

எனக் கூறினர்.

மனமானது ஒருகணமேனுஞ் சும்மாவிராது, விடயங்களைப் பற்றுதலும்சங்கற்ப விகற்பங்களைச் செய்தலுமாகவேஇருக்கும். மனத்தை அடக்கி நிறுத்துதல் மிக்க அரிதாகும். பெருங்காற்றைத் தடுத்துநிறுத்துவதெப்படி அசாத்தியமோ, அதுபோலத் தடுக்கக்கூடாததாய் தன்னிச்சையின்படி அலைந்து கொண்டிருக்கிற வாயுவின் அம்சமாகியமனத்தைஒரு வழிப்படுத்தி நிறுத்துவது சாத்தியமானகாரியமல்ல. மனம்போன போக்கில் அறிவையும் விட்டுவிட நேர்ந்தால், மனம் அளவில்லாத இன்பதுன்ப போகங்களையும், புண்ணியபாவகன்மங்களையும் வாரிக்கொண்டு வந்துசேர்க்கும். அவையாவும் ஆன்மாவுக்குப் பந்தமே. மனம் புறத்தே வியாபரியாது உள்ளேயடங்கிச் செயலற்றிருந்தால், புறவிஷயங்களெல்லாம் மனத்தினால் கிரகிக்கப்படா; அவை புத்திக்கும் விஷயமாகமாட்டா; ஆன்ம அறிவும் அப்புத்தியைக் கவ்வமாட்டா; அப்பொழுது ஆன்மாவுக்குச் சுகதுக்கங்கள் போகங்கள் நிகழா; புண்ணிய பாவங்களுஞ் சாரா; அதனால் பந்தமுண்டாகக்காரணமுமில்லை. மனத்தின் வியாபாரம் பிராணவாயுவினாலும், பிராணவாயுவின் இயக்கம் அகங்காரத்தினாலும் நிகழ்கின்றது. இதனையோகிகள் நன்றாய் உணர்ந்தவர்களாதலால், அவர்கள் சாத்வீகம், இராசதம், தாமதம் என்னும் முக்குண விருத்திகளை யொழித்து, அகங்காரத்தை விட்டுப்பிராணவாயுவைத் தடுத்து மனத்தை அகத்தே நிறுத்திக்கொள்வார்கள். முக்குணங்களை யொழித்தால் அகங்காரம் சாரமாட்டாது. அகங்காரம் அடங்கி

னால் பிராணவாயு இயங்கமாட்டாது; பிராணவாயு இயங்காதொழிந்தால் மனஞ் செயலற்றுவிடும்; மனஞ் செயலற்றுவிட்டால் ஞானேந்திரியங்கள் சுக துக்க விஷயங்களை ஏற்கா; கர்மேந்திரியங்கள் தொழில்செய்யா; அப்போது ஆன்மாவின் அறிவுபந்தமற்று ஆநந்தமயமாயிருக்கும். அதுபற்றியே யோகிகள், யோகமுயற்சியினாலே மனோலயஞ் செய்து பந்தமற்றவர்களாகின்றனர். இவ்வாறன்றி மனோலயஞ் செய்ய இரண்டுவித கருவிகளுண்டு. அவை, அப்பியாசமும் வைராக்கியமும் ஆம். அவற்றுள் அப்பியாசமாவது, நித்தியநைமித்திக கர்மாநுட்டானங்களைத் தவறாது முடித்துக்கொண்டு தான்வழிபடுந் தேவதையினிடத்துச் சித்தத்தைத் திறம்பாமல் வைத்துத் தியானம்செய்ய மனத்தைப் பழக்குவது. வைராக்கியமாவது, புறத்தேயுள்ள விஷயங்கள் தோஷமுடையனவென்று அநுபவத்தாற்கண்டு அவைகளிடத்தில் இச்சைவையாது அவற்றைவிட்டுவிலக மனத்தைப் பழக்குவது.

மனத்தின் விருத்தி எதுவரையிலும் இருதயத்தில் குவிந்து க்ஷயமாகுமோ அதுவரையிலும் அம் மனத்தைத் தடுக்கவேண்டும். அதுவே ஞானமூர்த்தியானமும் ஆம். அது க்ஷயமடையுங்கால் இருதயத்திலுள்ள புரிததி என்னும் நாடியில் பிரவேசிக்கும்; அங்ஙனம் பிரவேசிக்கவே விஷயவாசனைகளைக் கொண்டுவந்து உதவும் நாடிகளின் சம்பந்தம் அங்கு இன்மையால் சங்கற்பத்தையே தனக்குச் சொரூபமாகக் கொண்ட மனம் எரிதுரும்பற்ற தீயைப்போல் தானே தொலைந்துபோம்; இதுவே மனோலயம் ஆகும். இது உழைப்பால் வருவதன்றிச் சொல்லளவில் வருவதன்று.

சகல சமயாதீத சுத்தாத்வைதசித்தாந்த சைவர்கள் மனோலயஞ் செய்யும்ஞான மார்க்கமுயற்சி, யோகிகள் செய்யும் ஞானமாக்க முயற்சியைப்போல் அவ்வளவு அரிதன்று. அவர்களுக்கு அது அவ்வளவு எளிதில்கைகூடுவது எவ்வாறெனின், சுத்தாத்வைத சித்தாந்தசைவர்கள், முக்குணங்களையும், அந்தக்கரணங்களையும், இந்திரியங்களையும், பிராணவாயுவையும் பொருட்படுத்தி அவற்றையடக்கி யொடுக்க ஒருபோதும் நினையார்கள்; எல்லாத்தத்துவங்களையும் தம்மின் வேறெனக்கண்டு எல்லா வியாபாரங்களும் மனத்தால் வருவனவென்று உணர்ந்து தத்துவங்களோடும் மனத்தோடுஞ் சாராமல் விருப்பு வெறுப்பு அற்று சும்மா இருந்துவிடுவார்கள். அதாவது, மனத்தையடக்க முயற்சிசெய்யாமல் அறிவை பகிர்முகப்படுத்தாது உள்ளொடுக்கி அருளில் நிறுத்தி ஆநந்தத்தில் அழுத்தி அறிவுஞ்செயலுமற்று அசைவின்றி இருந்து விடுவார்கள். அப்பொழுது ஆன்மா எங்குந்நிறைந்த சிவத்தில் வேறறநின்று சிவமென்றுந் தானென்றும் பகுத்துணராமல் சிவமேயாய்த் தெவிட்டாத தெள்ளமுதமாகிய சிவானந்தத்தையுண்டு நித்தியமான பேரின்பந்துய்க்கும் மனோலயமடைவார்கள். இதுவே உண்மையான மனோலயம். இதனை தாயுமான சுவாமிகள்,

"எனதென்பதும் பொய்யானெனல்பொய் எல்லாமிறந்த இடங்காட்டும்
நினதென்பதும் பொய்நீயெனல் பொய் நிற்க நிலைக்கே நேசித்தேன்
மனதென்பது மோஎன் வசமாய் வாராதைய நின்னருளோ
தனதென்பதற்கும் இடங்காணேன் தமியேனெவ் வாறுய்வேனே"

என்றருளினர்.

இதுகாறுங் கூறியபடி மனோலய மெய்நிலையடைந்து பிறவியொழிக்க இறைவன்திருவருளை வேண்டுவோம்.

---

௨

# அயிலும் மயிலும்.

(கண்டாச்சிபுரம், திரு. அ. முத்தையப் பிள்ளையவர்கள்.)

ஆர்கலி யுலகிற் சீர்மலிந் தோங்கும் பரதகண்டத்தின் கண்ணுள்ள சைவசிகாமணிகள் பலர் தங்குறை நிவர்த்தியின் காரணமாக முருகப்பெருமானது திருக்கரத்தே விளங்கும் அயிலென்னும் வேலாயுதத்தையும், அவரது ஊர்தியாம் மயிலையுங் குறித்து 'வேலுமயிலுந் துணை' என வரைதலையும் கூறுதலையுங் கண்கூடாகக் காண்கின்றோம். வேல், முருகப்பெருமானது சத்திகளுளொன்று. அதற்கு ஞானசத்தி யெனப்பெயர். அதைத் தாங்கும் நம் குமாரக்கடவுளுக்கும் ஞானசத்திதரன், என்னுந் திருநாமம் வழங்குதல் காண்க. வேலானது, மூன்று சதுஷ் கோணங்களாற் குறிக்கப்படும். இச்சை, ஞான, கிரியை யென்னு முச்சத்திகளின் பரசொரூபம் முக்கோணமாகவும், அவற்றின் அபர சொரூபம் அம் முக்கோணத்தின் பாதகோண மிரண்டையும் ஆதாரமாகக் கொண்டு முக்கோணமாகவும் விரிந்து இரண்டும் கூடி நாற்கோணமாகும். பின்னுமந்த அதோமுக முக்கோணத்தினின்றும் அச்சத்திகள் தம்முள் மாறி இச்சையிற் கிரியை, கிரியையில் ஞானம், ஞானத்தில்இச்சை யெனக் கூடித்திரிகோணமாகும். அந்தத்திரிகோண பாதத்திலிருந்து அபரசொரூபமாகிய முக்கோணமுதிக்கும் அவை யிரண்டுங்கூடி சதுஷ்கோணமாகும். அதன் அதோமுக கோணத்தினின்றும் மீண்டும் அச்சத்திகள் தம்முள் மாறிக்கூடி முக்கோணமாகும். அதினின்றும் பின்னு முக்கோணமாகக் கூடி சதுஷ்கோணமாகும். இம்மூன்று நாற்கோணங்களுமே வேலாயுதமாம். முதற் சதுஷ்கோணத்தில் இச்சா சத்தியும், மத்திய சதுஷ்கோணத்தில் ஞானசத்தியும், பாத சதுஷ்கோணத்தில் கிரியாசத்தியும் உதித்து நிற்குமென்பர். இச்சத்திகளை யாயுதமாய்க் கொண்ட கடவுளை 'வேலாயுதன்' என்பதாம். இதனை,

"இச்சா ஞானக் கிரியையெனு மிவைமூன் றிலையாய்க் கிளைத்தெழுந்திட்
டச்சா ஞழியறச் சுவற்று மயில் வேலொருகை வலத்தமைத்து"

என்பதனாலறிக.

வேலைத்தாங்கிய விமலனுங் குமரனேறும் வாகனங்களிற் சிறந்தது நீலச்சிகண்டியே. இதனை யடியில் வரும் பிரமாணப் பாக்களாலறியலாம்.

"தனி மயிலேறு மிராவுத்தனே"
"நீலச் சிகண்டியி லேறும் பிரான்"
"விரிக்குங் கலாப மயூரத்தனே"
"விகடமுட நடை பயில் மயில் மிசை வரு"
"கார்மா மிசைகாலன் வரிற்கலபத், தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்'

என்பனவாம்.

முருகக்கடவுள் அயிலையும் மயிலையும் முறையே ஆயுதமாகவும் வாகனமாகவும் கொண்டிருக்க, அவரது எண்ணிறந்த திருநாமங்களினுஞ் சிறந்ததாக அயிலையும் மயிலையும் போற்றி 'வேலுமயிலுந் துணை' 'வெற்றிவேலுற்றதுணை' 'வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை' எனக்கூறித் துதிப்ப தெற்றுக்கென வாராய்தலே இக்கட்டுரையின் முக்கியநோக்கமாம்.

வேலாயுதம், ஞானசத்தியென மேலே விளக்கினோம். முருகப்பிரானும் ஞானசொரூபன். ஞானசத்தியை விட்டு இச்சாசத்தியும் கிரியாசத்தியும் பிரியாவாதலின் அவைமுறையே வள்ளியம்மையாரும் தெய்வானை

யம்மையாருமாக அருகமர்ந்துள்ளனர். பிரணவம், இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி யென்னும் ஆறும் அவரது திருமுகங்களென ஆன்றோரறைவர். ஆதலின் அயிலும் அறுமுகனும் ஒன்றெனக் கூறல் மிகையாகா. வேலாயுதத்திற்கு, சோம, சூரிய, அக்கினி யென்னு முச்சுடரும் மழுறயும்படி ஒளி வீசுந் தன்மையுண்டென ஸ்ரீ அருணகிரிப் பெருந்தகையார் தாம்பாடியருளிய திருவகுப்பு என்னுந் திவ்யப்பிரபந்தத்திலே,

"சுடர்ப் பரிதி யொளிப்பநில வொழுக்குமதி யொளிப்பவலை யடக்குதழ லொளிப்ப வொளி ரொளிப்பிரபை வீசும்" என மொழிந்துள்ளனர்.

ஆலேபாயும் மனத்தை யடக்கிச் சதாவேலை வணங்குவோர்க்கு அஞ்ஞானம் நீங்கப்பெற்று மெய்ஞ்ஞான மோங்கும்.

"வேலைநினைந் தாயோ வியன்கிங் கிணிசூழ்ந்த
காலைநினைந் தாயோ கனபோரூர்—வேலையாச்
சூழ்ந்துதொழு தாயோநீ சூரியா காரிருளைப்
போழ்ந்திடு வாள் ஏதோபுகல்."

'ஏ சூரியனே! நீ தினந்தோறும் முருகப்பிரானது திருக்கரத்தே விளங்கும் வேலாயுதத்தைத் தியானம் செய்தனையா? அன்றி சப்திக்கும்படியான சிலம்புகளணிந்த அவரது திருவடிகளை நினைந்தனையா? அல்லது திருப்போரூர் என்னுந் திவ்யதலத்திலேயே இருந்து அவரது சேவைசெய்தலே சிறந்த தொழிலெனக் கொண்டிருந்தனையா? இவற்றுளெதனால் இக்கரிய விருளை மாற்றும் கதிர்களுண்டாகப் பெற்றாய்? அதனைக் கூறுவாயாக" எனக்கூறும் பெரியாரது வாக்கால் வேலைநினைப் போர்க்கு ஞானப்பிரகாசம் விளங்குமென்பது வெள்ளிடை.

"ஏலம் வைத்த புயத்தி லணைத்தருள் வேலெடுத்த சமர்த்தை யுரைப்பவர்
ஏவருக்கும் மனத்தில் நினைப்பவை யருள்வோனே"

என்ற திருவாக்கின்படிவேலின் புகழும்வடிவேலன்சமர்த்தும் கூறிவணங்குவோர்க்கு எண்ணிய தெண்ணியவாறே எல்லாநலன்களும் எளிதினமையும். "பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச் சூர்முதல் தடிந்து" சுரர்களைச் சுகமுறச் செய்ததிச் சுடர்வேலன்றோ? வேல், சூரனாதி யவுணக்குழுவை வேரறச் செய்ததனாலன்றோ அரியும் பிரமனும் அமரரும் பிறரும் தத்தம் கலக்கமொழிந்து களினுற்றனர்; அன்பர்கள் துன்பகன்று இன்புற்றனர். அன்பர்கட்குத்தீங்குபுரிய நினைக்குந் துட்டர்களுடைய குலத்தை வேரறக் களையுங் கோடரிகங் குமரனது கூறியவேலே. இதனை

"சுரர்க்குமுனி வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்குநரர் தமக்குமுறு மிடுக்கண்வினை சாடும்"
"துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவர்
குலத்தைமுத லறக்களையு மெனக்கோர் துணை யாகும்"
"தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு
புறத்துமரு கடுத்திரவு பகற்றுணைய தாகும்"

என்னு மான்றோ ருரைகளானறிக.

சிவபூசையின் வைத்த மனந்திறம்பிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின் மரைச் சேர்த்துவைத்து அத்தகைய மற்றொருவரைத்தேடி



ஆயிரமாகச் சேர்த்துண்ணலா மெனத்திரிந்த ஓர் பூதம், நக்கீரர் சிவபூசை செய்து கொண்டிருந்த ஓர்தடாகத்தில் ஆலிலை யொன்றை விழச்செய்து அவ்விலையிலோர்பாதி மீனாகவும் மற்றப்பாதி பறவையாகவும் செய்ய, இவ்வற்புதத்தைக் கண்டு நக்கீரர் சிறிது மனங்கலங்க உடனே யவரையுங் கொண்டுபோய்க் குகையிற்சேர்த்து நீராடச் சென்றகாலை அருந்தமிழ்ப்புலவராம் நக்கீரர். 'திருமுருகாற்றுப்படை' என்னுந்திவ்யப் பிரபந்தம் பாட முருகக்கடவுள் வேலை விட்டக்கறளை வீழ்த்திக் குகையிலுள்ள ஆயிரவர் குறையும் ஒழித்தருளினர். நக்கீரரது பத்தியையும் வேலின் திறத்தையும் யாவரும் வியந்தனர். நக்கீரர் தனக்குற்ற ஆபத்தில் அதிவிரைவில் வந்தாருயிரளித்த அவ்வயிலைப் புகழ்ந்து அழகுபடப் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

"குன்ற மெறிந்தவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்."

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை"

இனி, நம் அறுமுகக்கடவுள் அமரர் சிறைமீட்க அசுரர்களோடு போர்க்கெழுந்து கிரவுஞ்ச கிரியையும் தாரகனையும் கொன்று, பானுகோபனால் கட்டுண்டு கடலில் மயங்கிக் கிடந்தநவவீரர் முதலியவர்களைமீட்டு வெற்றி கொண்டதும் வேலினாலேயே. அக்கால் சூரபதுமன் தனது குமாரன் 'இரணியன்' என்பவனைப்போர்க்குச்செல்லும்படிகூற அதையவன் மறுத்து தன்றாதைக்கு அவ்வேலின் திறத்தை வியந்து,

'தாரகற் செற்றதென்றால் தடவரை பொடித்த தென்றால்
வார்புனற் கடலுளுய்த்த வலியரை மீட்ட தென்றால்
கூருடைத் தனிவேல் போற்றிக் குமரன்றான் பணிவ தல்லால்
போரினைப் புரிதும் என்கைப் புல்மையோர் கடனதாமோ"

எனக்கூறுகின்றான். என்னே! பகைவனும் போற்றும் பண்பமைந்த வேற்படையின் புகழினை விளம்ப எம்போலியர்க்கியலுமோ? நம் மேலோர்,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே"
"பிணிமுக மேற் கொண்டவுணர் பீடழியும்வண்ணம்
அணிவிசும்பிற் கோன்எத்த மாறட்ட வெள்வேலே"
(சிலப்பதிகாரம்)

'ஓகையாற் றிரைமுன்னுளில் உழக்குமா வினையும் வாட்டும்
மேகவெவ்வரை யினெல்லை இடித்திடும் இமையோர் போற்றத்
தோகைமேல் உலவுங்கந்தன் சுடர்க் கரத்திருக்கும் வெற்றி
வாகையேசுமக்கும் வேலை வணங்குவ தெமக்குவேலை"
(செவ்வந்திப் புராணம்)

"பாலயிலுங் குழவியெனப் பாரிலுதியாமல்
பாறையினுங் கடியமனப் பாவையர் மாலுறாமல்
சேலயிலுங் கொக்கெனவெந் தீமைபுரி யாமல்
சேனையிலும் யானையிலும் சிந்தனைவை யாமல்
சூலையிலும் நமன்றூதர் வாதையிலும் படாமல்
சூறையிலுங் கொடியமனஞ் சுழன்று திரியாமல்
காலையிலும் பாம்பயிலுங் கார்மயிலை உகைத்தோன்
கையயிலை மாலையிலுங் காலையிலும் பணிவாம்"

(தணிகைப்புராணச் சுருக்கம்)

"மந்திரவடிவேல் வருக" "எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க"

(சஷ்டிகவசம்)

எனப் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளனர். இவற்றால் வேலாயுதத்திற்கு ஒப்பற்ற பெரும்புகழ் வாய்ந்துள்ள தென்பதும், தெய்வத்தன்மை யுண்டென்பதும் விளங்கப்பெற்றும். இனி, மயூரத்தின் சிறப்பை ஒருவாறு வகுத்துரைப்பாம்.

முருகப்பெருமானை, சூரபதுமனது யுத்தத்தில் முதற்கண் இந்திரன் மயிலுருக்கொண்டு தாங்கினு னென்பதும், பின்னர் சூரன் வேலாயுதத்தா லறுக்கப்பட்டு ஓர்பாதி குக்குடமும் ஓர்பாதி மயிலுமாகிவா அவனையாட் கொள்வான் வேண்டி மயிலை வாகனமாகவும் கோழியைக் கொடியாகவும் கொண்டனர் என்பதும் கந்தபுராண காதை. இதனை,

"சீர்திகழ் குமரமூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியி னிருக்கை நீங்கி யுணர்வுகொண் டொழுகிநின்ற
சூர்திகழ் மஞ்ஞை யேறிச் சுமக்குதி யெம்மையென்னுப்
பார்திசை வானமுற்றும் பரியென நடாத்த லுற்றான்"

என்பதாதிய செய்யுட்களால் தெளியலாம்.

குமரப்பெருமானது வாகனமாகிய மயிலை வணங்கினவர்க்கு மனமப லறும். மயில் பார்ப்பவரது மனத்தைக் கவரும் வனப்பு வாய்ந்துள்ளதா தலின் அதனைத் துதிப்போர்க்கு, அம்மயின்மீதாரோகணித்துள்ள பெருமானிடத்தும் மனம் செலுத்துதற் கேதுவாயுள்ளது. விஷத்தாற் பிறரைக் கொல்லுந் தொழிலுடைய கொடிய அரவை அம்மயில் கொன்றருந்துவதால் அது இடர் செய்யுந் துஷ்டர்களைச் சம்ஹரித்து இஷ்டர்களைக் காக்கும் எழிலுடைத்தென விளங்குகின்றது. அன்றியும் அடியார்களது துன்பொழியும் வண்ணம் குகனை அதிவிரைவில் தரிசனம் காட்டிவைப்பதும் அம்மயூரமே.

முன்னொருகால் திருவண்ணாமலையிலே பிரபுடதேவன தரசவையிலே அம்மனுபாசனையுடையவரான சம்பந்தாண்டார் என்பவருக்கும், ஆறுமுகன் திருப்புகழ் பாடும் அருணகிரியார்க்கும் வாதுநேரிட்டக்கால் அவ்வரசனது ஆக்ஞைப்படி சம்பந்தாண்டாரால் அம்மனது தரிசனம் காண்பிக்க இயலாமற்போக, அருணகிரியார் சண்முகனது தரிசனம் காட்டுவதாகக் கூறித் திருப்புகழ்பாட, அக்கால் சம்பந்தாண்டார் அம்மனை நோக்கி அவர்க்கு முருகதரிசனம் காட்டாதிருக்கச் செய்யுமாறு வேண்ட, அவ் வேண்டுகோட்கிரங்கி அம்மன் தனது குமாரனை மடிமீதிருத்திக் கொஞ்சிக் குலவி விளையாடி வேறிடங்களுக்குச் செல்ல வொட்டாதபடி செய்து



கொண்டிருந்தனள். இதனை யறிந்த நம்மருணகிரியார் மயிலைப் புகழ்ந்து பிரபந்தம்பாடி,

"உதயதாம மார்பான பிரபுடதேவ மாராஜன்
உளமுமாட நீயாடி.........வரவேணும்"

எனப் போற்றினர்.

உடனே 'மையனடஞ் செய்யும் மயில்' தனது நீண்ட சிறகுகளை விரித்து பார்வதியார்க் கெதிர்நின்று 'விகடமுட னடை பயின்று' நர்த்தனமாடியது. அச்சமயம் அம்மையார் அவ்வாடலையுற்று நோக்கித்தன்னை மறந்து பரவசத்தராகி விட்டனர். உடனே அன்பர்க்கிரங்கும் அறுமுகன் மயூரத்தி லாரோகணித்துக் காட்சி யளித்தனர். சம்பந்தாண்டார் தோல்வி யுற்றனர். இந்நிலையி லருணகிரியார்க் குதவிய இவ்வழகிய மஞ்ஞையன்றோ? இதனாலேயேஇத் 'திடமுடைச் சிறைமயிலை'ச் சிந்தனை செய்வோர்க்குச் சிறிதுந் துக்கமின்றிச் சிவகுமாரனது திருவருள் சித்திக்குமென நம்மான்றோர்,

"அருமையிலை யொருபொருளுக் கடிமையிலை பிறருக்
கந்தகனுக் காண்மையிலை யடியேன் வருதற்
கெருமையிலை சிறுமையிலை இன்மையிலை பகைஞர்க்
கெளிமையிலை மடமையிலை இழிதகைமை யிலைநோய்
பொருமையிலை வறுமையிலை பொய்ம்மையிலைப் பிறவிப்
புன்மையிலை தீமையிலை பொறுமையிலை மக்வான்
தருமயிலை வனமயிலை மணந்திருந் தணிகைச்
சண்முகனு ருவந்தேறுந் தனிமயிலைத் தொழவே"

எனக்கூறி யிருக்கின்றனர்.

மயில் அடியார்களுக்கு இறைவனது காட்சியை அதிவிரைவி லளித்தலானும், வேல் அன்பர்களது துன்பங்களைவதானும் அவ்வயிலையும் மயிலையுங் குறித்து நம் முன்னோர்கள்,

"ஆடும் பரிவேல் அணிசேவலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்"

"வேலு மயிலு நினைத்தவர் தந்துயர்
தீர வருள்தரு கந்த நிரந்தர
மேலை வயலை யுகந்துள நின்றருள்—பெருமாளே"

"மயிலையு மவன்றிருக்கை யயிலையு நினைந்திருக்வாருமே"

"அடல் புனைந்த வேலுமயிலு மென்றும் வாழி"

எனப்புகழ்ந்து பாடியுள்ளனர்.

அன்பர்களே! நாம் 'மயில் நடத்து குகன்' திருவருள் பெறுதற்கு அவரது ஊர்தியாம் 'உரத்த தனிமயிலை'யும் ஒளிகாலயிலையும் உள்ளன்போடு வணங்கி வருதலே மிக்க சால்புடைத்தாகும்.

"வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க"

"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்கநின்ற இராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி."

உ

# நல்லறிவுச் சுடர்.

திருவல்லிக்கேணி திரு. நல். கண்ணப்பமுதலியார் அவர்கள்.

எப்பொழுதும் உண்மையைப் பேசவேண்டும். எழுவகைத் தோற்றத்தையும், நால்வகை யோனிபேதங்களையுமுடைய சகலஉயிர்களுக்கும் எந்தச் சமயத்திலும் நன்மையையேசெய்யவேண்டும். சிவபெருமானைச் சதா தியானிக்கவேண்டும். இம் மூன்றும் கடவுள்தமதுவாக்காகிய வேதாகமங்களிலே முக்கியமாக அருளிச்செய்த விஷயங்களாம். இம் மூன்றுவிஷயங்களும் அகம், புறம், அவாந்தரமுதலிய சமயத்தாருக்கும் சம்மதமானவைகளே.

சத்தியமாவது:-உண்மையைப் பேசுவதினால் பிறவுயிர்களுக்குத் தீமை விளையுமாயின் அது அசத்தியமே, பொய்யைப் பேசுவதினால் பிறவுயிர்களுக்குநன்மைபயக்குமாயின்; அது சத்தியமே. ஆனால் சுயநலங்கருதிப் பொய் பேசுதல் சிறிதும்அடாது.

இதமாவது:-தன்னுயிரை நீத்தேனும் பிறவுயிர்களுக்குத் துன்பம் நேரிடாமல் அவற்றைக்காத்து அவற்றிற்குநன்மையையேசெய்தலாம். இவர்சுற்றத்தார், இவர் நட்பினர், இவர் அயலார், இவர்பகைவர் என்கிற பாகுபாட்டைநோக்காது எறும்பு முதலிய சகல ஜீவராசிகளையும் சமமாக நோக்கி அவைகளைக் காத்தல்வேண்டும்.

சிவமாவது:-சகல அண்டாண்ட பிரமாண்டங்களையும் அவற்றிலுள்ள ஆன்மகோடிகளையும் படைத்துப் புரக்கின்ற கிருபையோடுங் கூடித் தனக்கொப்புயர்வில்லாத கடவுளாம். சி. என்பது கடவுள். வ. என்பது அவரருள். வ. என்பது அருளைப் பெற்றாலன்றி சி. என்னும் ஈஸ்வரன்நமக்குத் தோன்றமாட்டான். சிவத்தை நினைத்தல் என்பது சகல வுயிர்களிடத்திலும் ஈஸ்வரன் தங்கியிருத்தலால் அவரிருப்பை நினைத்து எல்லா ஆன்மாக்களுக்கும் இரங்குந் தன்மையை வகித்தலாம். இப்படிப்பட்ட தியானத்தினாலே கடவுளுகந்து நமக் கனுக்கிரகஞ்செய்வார்.

இம்மூன்று விஷயங்களும் எல்லாச்சமயங்களிலும் இன்றியமையாதனவாயுள்ளவையாம். சத்தியத்தை யுரைக்க வேண்டுமென்றதனால் அசத்தியத்தைப் பேசக்கூடாதென்பதும் எல்லாவுயிர்களுக்கும் இதத்தைச் செய்யவேண்டு மென்றதனால் ஒன்றினுக்குந்தீங்கு செய்யக் கூடாதென்பதும் சிவத்தை நினைக்கவேண்டு மென்றதனால் வேறொன்றையும் நினைக்கக் கூடாது என்பதும் தானேயமையும்.

இவற்றிற்கெல்லாம் ஆதாரம் ஜீவகாருண்யம் ஒன்றே. ஆனபடியால் நாம் செய்யுந்தொழில்களெல்லாவற்றிலும் இக்கருத்தையே வளர்க்கவேண்டும். இதுவே முத்திக்கும் வித்தாகும். இச்சீவகாருண்யத்தைப் பெறுதலால் சுற்றத்தார், அயலார், மித்திரர், பகைவர் ஆகிய யாவரையும் ஒக்க நோக்கும் பாசவைராக்கிய முண்டாகும். இதனால் சிவன்பால் பக்தியுண்டாகும். இப்பக்தியினால் ஈஸ்வரன் மெய்ஞ்ஞானத்தைப் பாலிப்பன். இத்தப்பிரமஞானத்தினால் நாம் பிறவித்துன்பத்தினின்றும் நீங்கிப்பேரானந்த



முத்தியைப்பெறுவோம். ஆகையால் நாம் வருந்தியும் பிறவுயிர்களுக்கிரங்கும் அருளுடையராவோமாக.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோ னட்டுணர் வுகயிற் றினான்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்னுந்

திருமறைப்படிவிறகினிடத்திலேயுள்ள தீயைப்போலும், பாலினிடத்திலேயுள்ள நெய்யைப்போலும், பெரியமாணிக்கத்தினது ஒளியைப் போலும் மறைந்துநிற்கும் இறைவனார், மனத்தினிடத்தில் அன்பாகிய கோலை காட்டி அறிவாகிய கயிற்றினாலே முறுகிக்கடைய முன்பாகத்தோன்றுவார்.

யாவர்க்காயினும் அன்பும் அறிவும் இருந்தாலன்றிக் கடவுள் எங்ஙனம் முன்னின்றனுக்கிரகஞ்செய்வர்? அவ்வன்பும் அறிவோடுங் கூடி யெப்போதும் உண்டாயிருக்கவேண்டியது.

அங்ஙனமன்று விறகினிடத்தில் தீவியாபித்திருப்பது போலும், பாலில் நெய் வியாபித்திருப்பது போலும், கடவுள் எங்கும் வியாபித்து நம்முடைய ஹிருதயத்திலு மிருக்கிறார் ஆதலால் நாம் அவர் அனுக்கிரகம் பெறும்பொருட்டு வேறோர் முயற்சியுஞ்செய்ய வேண்டுவதில்லை யெனின் அது பொருந்தாது. என்னை? விறகினிடத்தில் தீவியாபித்திருந்தும் அதனை மற்றோர் விறகைக்கொண்டு மதித்தாலன்றி தீ வெளிப்படாதது போலும், பாலில் நெய் வியாபித்திருந்தும் அதனை மத்திட்டு மதித்தாலல்லது நெய் உண்டாகமாட்டாததுபோலும் கடவுள் சர்வவியாபியாய் நமது உள்ளத்திலிருந்தும் நமக்கு அவர்மேலன்பும் அதை ஒழுங்காகவிருத்தி செய்யும்படியான அறிவும் உண்டானாலன்றி அவர் நமக்கனுக்கிரகம் புரிவாரென்று புகல்வது எங்ஙனங்கூடும்? அவ்வன்பும் அறிவும் ஒருகணப்போது நமக்குண்டாயிருந்தால் போதுமே, எப்போது மிருக்கவேண்டுமென்று சொல்வானேனெனின் விறகும் பாலும் இடைவிடாது மதிக்கப்பட்டாலன்றி அவற்றினின்றுந் தீயும் நெய்யும் உண்டாகாததுபோலும் கடவுளும் வெளிப்படமாட்டார்.

சிலர் அன்பும் அறிவும் மனத்தினளவே செய்யவேண்டியதாகலான் வீட்டிலிருந்தபடியே கடவுளிடத்தி லன்பு செலுத்தலாமே. தேவாலயங்களுக்குப் போவது வீணான காரியமல்லவோ வென்பர். ஒருவனுக்கு வீட்டின்கண் யாதோர் சமுசார துக்கமும் இடையூறும் கணப்போதாயினு மில்லாமலிருக்குமானால் அங்ஙனம் செய்வது மொக்கும். அவ்வாறிருப்பதசாத்தியம். தேவாலயங்களே அவற்றைக்கூட்டும்சாதனஸ்தானம் எனத்தொன்று தொட்டு ஆன்றோரால் துணியப்பட்டது. ஆகையால் தேவுரையும் அத்தேவாலயங்களுக்குப்போய் கடவுளிடத்தில் அன்புசெலுத்தாது வேறோரிடத்திலிருந்து அன்பு செலுத்தியவரனுக்கிரகம் பெறுவோமெனில் கல்லில் நாருரிக்குங் கதைபோலாம்.

கடவுள்எங்கும் பரிபூரணராயிருக்க அவரை மனதினிடத்திலே தியானிக்காமல் தேவாலயங்களுக்குப்போய் மனிதனா லேற்படுத்தப்பட்ட விக்கிரகங்களைத் தொழுதல் பழுதாமெனின், கல்லையுஞ் செம்பையும் மனிதனா வேற்படுத்தினன்? அல்லது தெய்வவுருவங்களை நிச்சயிக்கும் மனத்தையும்

அவ்வுருவங்களைக் கருவிகளைக் கொண்டு முடிக்கும் இந்திரியங்களையும் இம் மனிதனா ஏற்படுத்தினான்? இல்லையே ஆதலால் எல்லாத் தெய்வ வுருவங்களும் மனிதர் அறிவுகளுக்குத்தக்க சாதனங்களாகக் கடவுளருளால் ஏற்பாடு செய்யப்பட்டனவே. நாம் ஓர்விஷயத்தைக் குறித் தாலோசிக்கும்போது யாதொருவஸ்துவையும் உருவமாக முன்னிட்டாலன்றி அவ் விஷயத்தை மனம் நாடி நின்று யூகிக்கமாட்டாதென்பது யாவர்க்கு மனுபவமே. அது போலும் காணப்படாத கடவுளைக் காணுவதற்கு இதுபோல் ரூபமாம். அன்றியும், பால் பசுவின் தேகமுழுதும் வியாபித்திருந்தும் அதன் முலையினின்றும் வெளிப்பட் டொழுகுவது போலும், சூரிய சந்திரர்கள் உலக முழுதும் வியாபித்திருந்தும் சூரியகாந்த சந்திரகாந்தக் கற்களினின்றும் நெருப்பையும் ஜலத்தையும் காண்பித்து போலும், சர்வபரி பூரணராகிய கடவுள் பெரும்பான்மையும் தேவாலயங்களில் தனது தெய்வவுருவங்களமைந்த விக்கிரகங்கள்மூலமாய் தம்மை வழிபடும் அடியார்கட்கு அவற்றின் மூலமாக வெளிப்பட்டு அனுக்கிரகம் புரிவாரென்பது உண்மையாம்.

திருச்சிற்றம்பலம்.

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறு
மினித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம். திருநாவுக்கரசர்.

## இரக்கத்தின் இறக்கம்.

அன்புள்ள அறிஞர்காள்!

நமது கருணைப்பெரியார் நவின்ற நற்பாடல்கள் அளவில. நல்லஉரைநடை நூல்களும் அதிகமே! இவை அறப்பண்புகாட்டுவன. மக்கள் அறிவானே மாக்களிலும் மேலானவர். மக்களை மக்கள் வாட்டாமல் தூர ஓட்டாமலிருக்க விரும்புவது சாலப்பொருத்தமே! ஐயையோ! ஆடு கோழிகளை அலற அலறிக் கழுத்தை அறுத்துக் கலத்தில் இட்டு வயிற்றை நிரப்புவது எவ்வளவு மதியீனம்! எவ்வளவு வன்கண்மை!! எவ்வளவு பாவம்!!! ஆடுகளை வெட்டித் தொங்கவிட்டிருப்பதைப் பார்த்துமகிழ்கின்றவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்? இதற்கு ஒரு படம்வேண்டுமா? ஆட்டுப் பிணந்தொங்கவிட்டதற்கு மேலான்காட்சி கிடையாதென்று படமிட்ட பத்திரிகையின் வீரமே வீரம்! இன்னும் சினிமாக்களில் ஆபாசங்களெல்லாம் படம்பிடித்து உலகினர் பணம்பறிக்க படமிட்டு வியாபாரம் நடக்கும்போதும்! இத்தகைய பத்திரிகைகளையும், பத்திராதிபர்களையும் மெச்சும் வாலிபர்களே! சற்று விழியுங்கள்! சற்று வாயில்லாப் பிராணிகளுக்கு உயிர்ப்பிச்சை யளியுங்கள் இரக்கந்தான் மக்களுக்கு வேண்டும். கண்ணுக் கணிகலங் கண்ணோட்டமே! இந்த நல்லற வீரந்தான் வேண்டும், வெறும்பேரில், பெரிய எழுத்தில் வீரம் இல்லை. வீரம் கடைச்சரக்கன்று. இரக்கம் இறக்கமானால் என்ன பயனடையலாம்? பிறவி பாழாய்விடும்! ஆகவே, மனிதன் மனிதனாகவாழ மனச்சிந்தனை வேண்டும். சற்று சிந்தியுங்கள்!

ஜீவ கருணையன்.



தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

412. செற்றா ரெலும்பணி சீர்முது குன்றர் செழுஞ்சிலம்பர்
கற்றார் பயன்பிறர் தீமையை நீக்கல் கடனெனத்தாம்
உற்றா ருரைப்பது கேட்டிங் குறுவ துரைப்பதற்குப்
பற்றார்வ மோடு முனம்வந்த தாலிப் படர்முகிலே. (௫)

### ௫௦. காவற் பிரிவு.

காவற்குப் பிரிவு தலைமகனால் உணர்ந்த தோழி
தலைமகட்கு உணர்த்தல்.

413. செய்யம் புறுகயல் பாய்கா முதுகுன்றர் சீர்ச்சிலம்பில்
மையம் பனவிழி மங்கையர் நாட்கு மதியனையாய்
ஐயம் பவன்றனை யோரால் வெலுநம் பரசரின்று
வையம் பரித்தல் பெறவகன் றார்தம் வலியுடனே. (௧)

தலைமகள் கூதிர்ப்பருவங் கண்டு வருந்தியது.

414. தளிர்படு மேனி யுமைசேர் முதுகுன்றர் தண்சிலம்பிற்
களிபடு சிந்தையர் முன்னை நீத்துக் கருதிலராய்
அளிபடு கூந்த லணியிழை மாதே யகமொருவிக்
குளிர்பனிவாடைக்கெனைக்கொடுத்தேகினர்கொற்றவரே. (௨)

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

415. பூநந் திடங்கொளுஞ் செய்முது குன்றர் பொருப்பிடத்தில்
நீநந்த வென்கொல் வரிவிழி மாதே நினைநினைந்து
மாநந்த வேல்விடு காளையை யொத்துறு மன்னரின்று
கூனந்த வார்சரற் காலங் குறித்துக் குறுகுவரே. (௩)

413. நாட்கு - நட்சத்திரங்களுக்கு. மங்கையர் நாட்கு மதியனையாய்: "பன்மீனப்பட் பான்மதி போல, இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (சிறுபாண். 219-20.) ஐயம்பவன் - மன்மதன்.

415. பூ நந்து இடம் கொளும் - தாமரைப்பூவைச் சங்கு இடமாகக் கொள்ளும். மா நந்த - சூரனாகிய மாமரம் கெடும்படி. காளை - முருகக்கடவுள். கூன் நந்த ஆர் சரற்காலம் - யாவருக்கும் வளைதல் மிகும்படி ஆர்ந்த சரற்காலம்.

## ௫௧. தூதிற் பிரிவு.

தூதிற்குப் பிரிவு தலைமகனுணர்ந்த தோழி
தலைமகட்கு உணர்த்தல்.

416. பரவைக்குச் சந்து செலுமுது குன்றர் பனிவரையார்
உரவுக் கருங்கடன் மாநில மன்ன ருறுமுரண்போய்
விரவிக் கலந்துறு நட்பாகச் செய்து விடைகொடுப்ப
அரவுக் குறழிடைப் பைந்தொடி யாயின் றகன்றனரே. (௧)

தலைமகள் முன்பனிப் பருவங்கண்டு வருந்தியது.

417. சூலங் கரத்திடைக் கொண்முது குன்றர் சுடர்க்கிரியார்
ஞாலங் கருத்திடைக் கொள்ளர சர்க்கு நடுவுரைக்குஞ்
சீலங் குறித்தவர் செல்போது முன்பனி சேர்ந்ததுதான்
காலங் குறித்த பகைபோ லெனக்கின்று காட்டியதே. (௨)

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

418. பண்ணோ டியசொல் லுமைசேர் முதுகுன்றர் பன்வரையார்
கண்ணோ டியவழி யுள்ளம் பொருது கடிதடைந்தார்
விண்ணோ டியல்புவி முன்பனி மூடுதன் மேவிரார்
பெண்ணோ டவரும் பிறந்தவ ராதலிற் பெய்வளையே. (௩)

---

## ௫௨. துணைவயிற் பிரிவு.

பாங்கி தலைமகட்கு உணர்த்தல்.

419. பூமே வியதடஞ் சூழ்முது குன்றர் பொருப்பிறைவர்
மாமே வியதமை நட்டோ ரிடுக்கணை மாற்றுதற்குத்
தாமே வியதுணை யன்றிப்பின் னில்லர் தணந்துநின்னை
நோமே வியபின் பனிக்காலம் போயினர் நோக்கிலரே. (௧)

தலைவி பின்பனிப்பருவம் கண்டு வருந்தியது.

420. வேலைக் கருநஞ் சுணுமுது குன்றர் வியன்சிலம்பில்
மாலைப் புயமுடை யன்பரிப் போது மனம்பொருந்தி

416. முரண் - பகைமை.

பி - ம். 'அரவுக்குறழல்குற்'

418. பண்ணோடிய - பண்தோற்றோடுதற்குக் காரணமான. இராராய் அடைந்தாரென முடிக்க.



காலைப் பனியு நலமறு வாடையுங் கண்டகன்றார்
கோலைப் பெறுதனு மன்னவர்க் குற்றுழிக் கூடுதற்கே. (௨)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

421. பொன்னங் கிரியை வளைமுது குன்றர் பொருப்பணங்கே
பன்னுந் துணையினர்க் குற்றுழிப் போன பரிவெனநீ
மன்னுந் துயர்பெறப் பின்பனிக் காலம் வருத்துதலை
உன்னுங் கணவர் வருவரிப் போதே யொழிதுயரே. (௩)

---

## ௫௩. பொருள்வயிற் பிரிவு.

பொருள் வயிற்பிரிவு தலைமகனுணர்ந்த
தோழி தலைமகட்கு உணர்த்தல்.

422. மின்கொண்டன்மேவும்பொழின்முதுகுன்றர்வியன்சிலம்பில்
வன்கொண்ட கொங்கை மலர்த்திரு வொத்திடு வார்குழலாய்
முன்கண் டறியா தவர்போல வின்று மொழிநசையாற்
பொன்கொண் டடைந்திடப் போயின ரின்று புரவலரே. (௧)

தலைமகள் இளவேனிற்பருவங்கண்டு வருந்தியது.

423. பைந்துணர்க் கொன்றை புனைமுது குன்றர் பனிவரையார்
செந்தளிர்ச் சூத மரமேறிப் பூங்குயில் சேர்குரலால்
வந்தது நல்லிள வேனிலென் றேசொல் வருத்திடவும்
புந்தியிற்செம்பொன்விருப்படைந்தன்பின்றிப்போயினரே. ()

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

424. துடியா ரிடையாய் முதுகுன்றர் வெற்பிற் றுணர்ப்பொழிலாம்
படியாரு மாதர் புதுவணி தாங்கிப் பரிவுறநல்
வடிவார் மதனன் புயமே விரதி மலர்த்தொடைவேய்
கடியார் மணமென்று பொன்கொண்டு வந்தனர் காதலரே.(௩)

420. கோலை - அம்பை. மன்னவர்க்கு உற்றுழி - பிற அரசர்களுக்குத் துன்பம் வந்தவிடத்து; "வேந்தர்க்குற்றுழி" இறை. சூ. 35.

422. வன்கொண்ட - வன்மையைக் கொண்ட.

423. குயில்......போயினரே: "விரிகாஞ்சித்தாதாடி யிருங்குயில் விளிப்பவும், பிரிவஞ்சாதவர்" (கலி. 34.); "சூரமாங்குயிற் சின்னங்கள் காமத் துரைவந்தான் றுரைவந்தானென்றூத" திருக்குற்றலக்குறவஞ்சி, 46.

பி - ம். 'செம்பொன் வியப்படைந்து'

**தலைமகள்உருவெளிப்பாடுகண்டுதலைமகன்சொல்லியது.**

425. உமையுற்ற பங்கர் முதுகுன்ற வாண ருயர்வரையில்
சுமையுற்ற கொம்மைப் புணர்மா முலையுஞ் சுரிகுழலும்.
அமையுற்ற தோளு மயிலார் நெடுங்கணு மாயமைய
இமையுற்ற வேல்விழி பார்க்குந் திசைதோ றெதிர்ப்படுமே. ()

**பாசறை முற்றி மீண்டுவந்த தலைமகன்**
**பாகற்குச் சொல்லியது.**

426. பொலமன்னு கொன்றை யணிமுது குன்றர் பொருப்பிடத்தில்
பலமன்னர் தங்களை வென்கண் டனமினிப் பாய்பரித்தேர்
வலமன் னியபுயங் கொள்வல வாநம் மணிநகர்க்கு
நலமன் னுறுகல மம்புவிற் போல நடத்துவையே. (ரு)

**தலைமகன் கார்ப்பருவங் கண்டு உவந்து சொல்லியது.**

427. பெண்கட் கரசி யிடமுது குன்றர் பிறழ்சிலம்பிற்
கண்கட் கினியளும் யானுமொன் றாகக் கலந்துநெஞ்சம்
பண்கற் றனங்கடன் மேய்ந்து விசும்பிற் படர்முகில்காள்
மண்கட் கினியன திகழ்ந்தும் மாரி வழங்குகவே. (சு)

---

முன்பு அகப்படாமல் இருந்தமையின் பதிப்பிக்கப்படாமல் இருந்த இந்நூலின் 48 - ஆம் செய்யுள் வேறு ஒரு பிரதியில் தனியே எழுதப்பட்டிருந்தது; அது வருமாறு:—

**பாங்கன் எவ்விடத்து எவ்வியற்றென்றல்.**

* விரைசேர் மலரவன் போற்றும் பழமலை மெய்யர்வெற்பில்
உரைசேர் பசும்பொற் குடமுலை வாட்க ளொளிர்முகிலின்
நிரைசேர் வளைய கருங்குழற் செவ்வாய் நிகழ்கொடிக்குப்
புரைசேர் விலாவிட மேதியல் பேது புகலுவையே.

---

425. அமையுற்ற - மூங்கிலை ஒத்த; உற்ற - உவமவுருபு; "செப்புற்ற கொங்கை" (திருச்சிற். 354.) வேல்விழி - தலைவி; எழுவாய்.

426. கலம் அம்புவிற்போல - மரக்கலம் நீரிற் செல்லுதலைப்போல; அம்பு வடமொழியாதலின் உயிர்வந்தவழி உகரம் கெடவில்லை. தேரை நகர்க்கு நடத்துவை யெனமுடிக்க.

427. பெண்கட்கரசி - உமாதேவியார். பண் - அலமவு.

* விரை - வாசனை. முகிலின்நிரை - மேகத்தின்வரிசை. புரைசேர்வுஇலா - குற்றம் சேர்தலில்லாத.

பழமலைக்கோவை முற்றுப்பெற்றது.

உ

# சிறப்புப்பாயிரச் செய்யுட்கள்.

(விருத்தம்.)

1. பங்கயத் தயன்செய் மலைகளி லுயர்ந்த
பழமலை யிடத்துறை யிறைவன்
பொங்கிய புகழ்சே ரைந்திணைக் கோவை
புதுமொழித் தமிழினாற் செய்தான்
செங்கயற் செய்யுஞ் சோலையுஞ் சூழ்ந்த
சீர்த்துறை மங்கைமா நகரிற்
சங்கையில் கருணைச் சிவப்பிர காசன்
தருசாமி நாதபா வலனே.

(கட்டளைக் கலித்துறை.)

2. கோடார்முதுகுன் றுடையாருக்கைந்திணைக்கோவைசெய்தான்
தோடா ரலர்த்தண் டலைசூழ் துறைமங்கைத் தொன்னகர்வாய்ப்
பீடார் கருணைச் சிவப்பிர காசையன் பெற்றெடுத்த
சேடார் புகழ்தருஞ் சீர்ச்சாமி நாதைய தேசிகனே.

3. இருவோருந் தேடும் பழமலை நாத ரெழிற்சடைமேல்
திரையாருந் தன்குல மாமகி ழுன்னையுஞ் சி............
............ருங் ...காவையுஞ் .........சுவாமி நாதனுயர்
வரமாரு முத்துக் குமாரனென் றேதுறு மன்னவனே.

---

1. துறைமங்கை - துறைமங்கலம். சங்கை - அளவு.

2. கோடு - சிகரம். தோடு - பூவிதழ்.

3. இச் செய்யுள் எழுதப்பட்டுள்ள ஏடு சிதைந்திருத்தலின் இதன்முழு உருவமும் புலப்படவில்லை.

# பழமலைக் கோவை

## செய்யுள் முதற்குறிப்பகராதி.

[எண்—பக்கஎண்.]


| | |
|---|---|
| அகலுந்தடம் | 52 |
| அங்கமனலெனக் | 72 |
| அஞ்சத்தவன் | 70 |
| அடியர்க்கிரங்கு | 30 |
| அடியார்க்கருளும் | 80 |
| அடியார் பிறவி | 13 |
| அணியுற்றநீள் | 10 |
| அந்திச்செவ் | 68 |
| அம்பிசைந்தாரும் | 40 |
| அரந்தையகற்றும் | 8 |
| அரவின் குழை | 35 |
| அருகின்மடந்தைய | 73 |
| அருள்விழிகொண்ட | 28 |
| அலர் கூறிய | 70 |
| அலையிலிருந்தவன் | 43 |
| அவிர்கொன்றை | 83 |
| அவிசேரிதழி | 72 |
| அறவர் வழுத்தும் | 17 |
| அறிவில் விளங்கிய | 68 |
| அறுகு பெருக்கும் | 64 |
| அன்பின் விளங்கு | 63 |
| அன்னஞ்செறி | 57 |
| அனந் தேடுமைந்து | 53 |
| அனமே செறியுங் | 41 |
| ஆடுங் கொடிமுது | 69 |
| ஆரணம் போற்றுங் | 45 |
| ஆவிக்குறுதுணை | 9 |
| ஆற்றில் விடுத்த | 8 |
| இசையார் பெரு | 12 |
| இடபக்கொடியார் | 62 |
| இந்திரற்கஞ்சா | 86 |
| இரதியொடும் | 69 |
| இருவர்க்கருளு | 64 |
| இருவோருந் (சிறப்) | 93 |
| இருளுக்கிடமாங் | 60 |
| இலங்குமயிலற் | 39 |
| இளங்கதிரென்ன | 29 |
| இறைவிக் கொருதுணை | 88 |
| இன்னரிவரென் | 16 |
| ஈர்மஞ்சுறு | 58 |
| உணர்வார்க்கரிய | 28 |
| உமையுற்றபங்கர் | 92 |
| உழைகண்ட | 13 |
| எட்டாருருவர் | 47 |
| எமையாளுமையர் | 8 |
| எய்தகணையரி | 50 |
| எருக்குமிதழியு | 23 |
| எல்லா முணர்ந்த | 76 |
| ஏந்தெழின் மங்கை | 88 |
| ஏலக் கருங்குழல் | 2 |
| ஏற்றுக் கொடியர் | 9 |
| ஏறூர் கொடியர் | 5 |
| ஐயானனமுடை | 77 |
| கஞ்சப்பத | 63 |
| கஞ்சன்றலை | 4 |
| கடலைக் குடித்த | 87 |
| கண்ணன் பரவக் | 36 |
| கண்ணார் நுதலர் | 11 |
| கணங்கட்கிறைவர் | 83 |
| கணிப்பில் | 49 |
| கம்மூர்பொழில் | 54 |
| கரத்திற்படு | 50 |
| கராமடுச்சூழுங் | 84 |
| கருகுங்களத்தர் | 41 |
| கருஞ்சேற்றகல் | 66 |
| கரும்பாடு மோசை | 49 |
| கருவிற்புகுதா | 44 |
| கருவேலை வீழா | 52 |
| கலர்கண்டு | 42 |
| கலைமாது பாடும் | 82 |
| கலையாகத் தோலைப் | 35 |
| கலையார் புகழ் | 38 |
| கலையிற் பரந்த | 34 |
| களவேகருங் | 11 |
| கற்பனைபொன்று | 46 |
| கற்புக் கருந்தவஞ் | 67 |
| கற்றூர்பரவுங் | 72 |
| கறுத்தே விளங்குங் | 87 |
| கறுப்பார்களஞ் | 83 |
| கன்னிக்கிடத்தை | 61 |
| கனங்கடவழும் | 47 |
| கனங்கொள் | 66 |
| கனத்திற்றிகழ் | 22 |
| காசி சுடலை | 86 |
| காணிற் கதியருள் | 67 |
| காத்தென்குடியை | 78 |
| காதார ரவக் | 3 |
| கார்காட்டு | 24 |
| கார்காவல் கொள் | 44 |
| காருமதியுங் | 13 |
| காலனைந்தலைப் | 73 |
| காலின் வளைமுத் | 40 |
| காவற் புனத்தினி | 62 |
| காவன்னபூம் | 67 |
| காற்றார்பவ | 75 |
| குருகார்மலர்த் | 35 |
| குலவும் விடை | 70 |
| குலைசாய்கதலிகள் | 10 |
| குளத்திற் கிசைந்த | 63 |
| குறப்பாவை நம்பனை | 74 |
| கூற்றைக் கடந்த | 56 |
| கூனனையாகப் | 74 |
| கூனிரும்பால் | 33 |
| கூனும்பிறையணி | 25 |
| கைக்காககங்கணர் | 10 |
| கையார் மழுவர் | 2 |
| கையுற்றநவ்வியர் | 64 |
| கோங்காற் சிறந்த | 49 |
| கொங்குனி | 82 |
| கொந்தார் கடுக்கைத் திரு முதுகுன்றர் | 56 |
| கொந்தார் கடுக்கை முது குன்றர் | 37 |
| கொழிக்குந் தாள | 7 |
| கொன்றைச் சடைமுடி | 54 |
| கொன்றைச் சடையார் | 3 |
| கோடார் (சிறப்) | 93 |
| கோழிக்கொடியன் | 27 |
| சங்கந்தவழ்பணை | 52 |
| சங்கந் தவழ்வயல் | 10 |
| சங்கம் பொருந்தும் | 61 |
| சங்கார்பணை | 6 |
| சங்காழ்புனற் | 24 |
| சங்கூர்வயல் | 49 |

சந்திரன் மேவு 21
சிந்தாகுலந்தீர்த் 77
சிலையுங்கணையுங் 17
சிறைவண்டினங் 60
சினங்கொண்ட 39
சீர்தங்கு 1
சீரார்பெருமை 51
சுதையுற்றெழுந்த 84
சுருதிப்பொருளர் 9
சுரும்பார் குவளை 81
சூலக்கரத்தர் 51
சூலங்கரத்திடை 90
சூலார்முகில் 12
சூலார்வளைகள் 6
சூலுக் குளைந்து 29
சூலுக் குளைவளை 51
செங்காவிநீர் 79
செங்காற்பசிய 33
செத்தார்பிறவா 15
செந்தாதிதழிச் 26
செந்தாமரை 22
செந்தீயுருவர் 76
செந்தீவணர் 80
செங்கெற்செறி 4
செம்மேனியையர் 20
செம்மைத் திருமுக 46
செய்யம்புறு 89
செய்யால் விளங்குக் 85
செய்யின்மணி 58
செய்வேள்சிலையார் 38
செல்லார்மலர்ப் பொழில் 43
செற்றூர்புரமெரி 48
செற்றுரெலும் 89
செறிதழையாது 36
செறிமாதவர்தாழ் 19
சேனும் பரவுக் 27
சேணைப்பொருந்து 55
சேமன்கொடியர் 81
சேயெனத்தேடி 68
சேவிற்றிகழுங் 54
சேவைக் கொடிகொளும் 73
சேவைக்கொடியில் 19
சோன்மாலைவேய்ந்த 31
சோலைக் கமுகு 62
சோலைத்திருமுது 22
சோலைப்புறமு 54
தஞ்சங்கலந்த 84
தண்ணார் மலர் 5
தணிக்கும்பவத்தர் 9
தம்மாதிடத் 28
தளிர்படுமேனி 89
தன்பொற்பதங்கள் 56
தன்னைக்கடு 51
தன்னைக்கண்டார் 25
தாவுமுழைகொள் 16
தாழுங்குழல் 3
தாழுமவர்க்கருள் 5
தீங்கட்சடையர் 76
திணியபுயமுடை 74
திணியுற்ற 71
திருத்துங்குழல் 69
திருந்தாரணம் 26
தீரதபாவத் 85
துங்கம் பொருந்தும் 44
துடியாரிடை 91
துதியைப் பொருந்தும் 44





தும்பையணிந்த 50
துள்ளியெழுமான் 71
துளிக்குமது மழை 68
துறவிக்குலங்கள் 37
துறவுவிரும்பி 35
துன்பர் தமக்குத் 41
துன்பிற் படுமெனை 46
தூயர்மனங் 85
தெருளும் பொருள் 2
தேங்கும்புனற் 66
தேடிப்பதியைக் 31
தேடுமிருவர்க்கரியார் 78
தேடுமிருவர் திருமுது
குன்றர் 75
தேயுற்றவெண் 24
தேவர்க்கரியர் 71
தேவிக்கருளுந் 65
தேவிற்பெரிய 74
தேன்வீழுஞ்சோலை 4
தேனுண்டவண்டு 6
தொடுநீருலகந் 83
தோகைக்கொருபுறம் 44
தோயங்குடிகொள் 39
தோய முடிகொ 77
நச்சிப்பணியும் 43
நஞ்சார் மிடற்றர் 14
நஞ்சுக்குரியகளமுது 33
நஞ்சுக்குரிய மிடற்றூர் 9
நடமாடு 53
நடைசேர் பயணம் 81
நந்தாமணிவிளக் 18
நந்திக்கொடியுடை.........
......அந்திப்பிறை 14
நந்திக்கொடியுடை... ......
......தந்திக்கிணை 31
நம்பாலருளுடை 48
நம்பாற்கருணை 58
நம்மைப்பிரிந்தார் 55
நலத்திற் சிறந்த 88
நற்குன்றமாகுந் 79
நனைகாவலர் பொழி 32
நிலந்துன்பகலத் 45
நிறையும்புனற் 64
நீங்கருமாதின் 39
நீங்காததன் 73
நீர்கொள்சடை 76
நீர்மலிவேணித் 56
நீர்மேவு செஞ்சடை 14
நீரார்சடையர் 30
நீரும்பிறையு 16
நெஞ்சார் துரிசு 73
நெல்லுங் கரும்புஞ் 52
நேரின்றிய புகழ் 19
பங்கமிலாத 35
பங்கமுழுதுந் 39
பங்கயத்தயன் (சிறப்) 93
பங்காருமையர் 64
பங்கேருகத்தடம் 8
பண்டவ்விடத்தை 62
பண்டார் குறுமுனி 60
பண்ணைப்பழித்திடு 78
பண்ணேடிய 90
பணியாகப் பாம்பை 50
பணியாரவைக் 3
பணியுற்ற மெய்யர் 72
பணியேறுசெஞ் 22

பணையார்தடங்கள் 11
பதிசேர்ந்திரா 59
பந்தங்கெடுத் 12
பந்தந்தவிர்க்குந் 37
பந்தாடுமங்கையர் 38
பரவைக்குச் 90
பரைப்பால் 30
பலத்திற் கரிய 82
பற்றூர்புரமெரி 45
பன்னகப் பூணணி 83
பன்னூட்டத்திந்திரன் 36
பாட்டிற்குரிய 67
பாந்தளம் பூணணி 36
பாம்பாகிய 12
பாம்பையடுத்த 14
பாயுமதிக்கரத் 34
பாயுமுழைகொள் 43
பார்மேலமரர் 32
பாரலர்கொண்டு 59
பாரும் விசும்பும் 5
பரவோர்தவத் 25
பாலைக்க முகு 17
பிணைகொள் 75
பிளவுமதி 15
பிறக்குமுயிர்க்குத் 32
பிறவாவழி 30
பிறைகொண்ட 12
பின்னுஞ்சடிலத் 59
புகழ்வாரைப் 86
புங்கம்பொருந்து 81
புல்லையுரித்த 38
புலத்தகம் போகா 66
புலமன்னு கொன்றை 92
புனத்திற்கிளி 57
பூநந்திடங்கொளும் 89
பூமேவியதடம் 90
பூவும் பொழியும் 1
பூளைச்சடை 79
பேண்கட்கரசி 92
பெண்ணுக்கருங்கல 8
பைங்குவளை 13
பைங்கேழ்ப் 65
பைந்துணர்க் 91
பொடியேயணியும் 40
பொதுவினடப்புரி 84
பொருந்தாரணம் 11
பொன்கண்ணனைய 71
பொன்பதித் 54
பொன்னங்கிரியை 91
பொன்னற்கரிய 72
பொன்னேரனைய 63
பொன்னொத்த 77
போதைத்துறந்திம் 61
போர்கொண்ட 36
போராரும் வேலர் 67
மங்கைக்குடம்பு 61
மஞ்சார்கொடி 55
மடுவால்வளை 85
மடைதங்கு 37
மடைவைக்குஞ் 65
மண்டும்பிறைச் 75
மண்ணின்ப 29
மண்ணுக்கினிய 46
மணிமுத்தமாநதி 21
மணிமுத்தவாறு 34
மணியார்மிடற் 34





மதுமழை 21
மரியாதிருந்திட 82
மருப்புத்தலைச் 65
மல்லைத்தரித்த 22
மலைபெற்ற 6
மலைமின்னிடங் 74
மலையிற்பெரும் 81
மழைதாழ்பொழில் 7
மழையைக் கொளும் 28
மறிபொற்கர 63
மறியார்கர 58
மறையார்புகழுடை 16
மறையோரெரிமுன் 20
மண்மாலறியா 16
மன்னுரிசை 49
மாகத்தவர்கள் 42
மாகத்தளவு பொழின் 53
மாகத்தளவு மதில்சூழ் 80
மாதுகவரு 3
மாதேமனையுங் 71
மால்போல 60
மாலைக்குழலி 75
மாறன்பிரம்படி 74
மானீன்ற கண்ணி 2
மாறொன்றுகை 27
மின்கொண்டல் 91
மின்போன்றவிர் 19
மின்மேனிகொள் 85
மின்னார்சடையர் 2
மின்னிப்பொழியு 60
மின்னேயிடை 11
முகமைந்துடைய 7
முத்தாறுசூழும் 4
முறிச்சிக்கை 48
முன்பாதவன் 26
முன்மேலெழுந்த 17
முன்னமயற்கருள் 32
முன்னீர்குடிக்கும் 4
முன்னீர்பருகு 15
முன்னோர் சசிவன்னன் 47
முனிவோர் பரவுந் திருமுது குன்றர் 27
முனிவோர் பரவுந் திருமுது குன்றினர் 31
மெய்க்குப்பொருந் 69
மெய்யுற்றவர் 63
மைக்கொண்டல் 45
மைந்நாகன் 80
வண்டார் 1
வண்டுஞ் சுரும்பும் 58
வணர்வார் 88
வத்திரமைந்து 62
வயலாற்சிறந்த 19
வல்லிற்றிகழு 57
வள்ளற்றகைமை 23
வளவேருழுவயல் 5
வன்னிக்குறுசொல் 24
வனத்தன்பில் 32
வளைவார் குழலி 18
வாடாத சீருடை 39
வாணற்கருள்புரி 34
வாவித்தடமலர் 42
வாழுமுதுகிரி 26
வாழைக்குலையினை 25
வாளைகுதிக்குந் 57
வாளைத்தடஞ்சேர் 65

வான்செய்த பூசை 43
வான்சேர்பொழில் 87
வான்றொட்ட 52
வானத்துயர் பொழில் 78
வானம் பொருந்தும் 87
வானலங்கொண்ட 42
வானிற் செறிபொழில் 24
வானுந்தொழு 20
விசையன்றனு 52
விடங்கொண்ட 7
விடந்தங்கு 38
விடும்பற்றுடை 23
விடைகாட்டிய 25
விண்கொண்ட 13
விண்டடுத்தோங்கு 46
விண்டிடுபூவார் 40
விண்டுவந்தேத்தும் 10
விண்டென்றுங் 29
விண்ணம் விரும்பு 17
விண்ணளக்கும் 23
விண்ணிற்கரிய 66
விண்ணிற்சிறந்த திருமுது குன்றர் 6
விண்ணிற்சிறந்தவிருத் தாசலர் 14
விண்ணைக்கடந்த 70
விண்போற்சிறந்த 53
விதிசாரதியாக் 48
விதியும்பணியுச் 20
விந்தமடக்கும் 41
விரிக்குந்தலை 15
விரிகா முதுகுன்றர் 55
விரிந்தார்கடுக்கை 59
விரைசேர் 92
விரையார்மலர் 11
விளைகொள்வயல் 47
விற்றோளுடைய 21
வினைகாவனீக்கி 64
வெங்கோலரசன் 68
வெண்ணீறணிந்த 79
வெள்ளப்புனற் 78
வெள்ளிக்கிரியை 87
வெளியுமுருவு 33
வேணித்திருமுடி 27
வேதன்படைத்த 18
வேலைக் கடுவிட 26
வேலைக்கருநஞ் 90
வேலைப்பிடித்த 37
வேலைக்கடந்த 69
வேலைப்பொடித்த 29
வேனிற்றுணைவன் 56




என்பதும் உணர்த்துதற்கு, 'இருவினை யின்றி மேலாமின்பத்தை யளிப்பதாகும்' எனவும், நூல்கள் பலவற்றுள்ளும் ஞானநூலே சிறந்ததென்பதும், அதனை யுணர்ந்தோரே சிவபரம் பொருளினிடத்துவிட்டு நீங்காத அன்புடையாராவரென்பதும் உணர்த்துதற்குப் பின்னைய இரண்டு அடிகளுங் கூறினார்.

சிறப்புக்கள் பலவற்றுள்ளும் மலமின்மையே மிகச் சிறந்தது. இதுவே, உண்மையில் சிறப்பெனப்படும். இக்கருத்துப்பற்றியே *"சிறப்புஈனும்" எனவும், ‡"சிறப்பென்னும் செம்பொருள்" எனவும் ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்வாராயினர்.

இருவினையின்றி மேலாமின்பத்தை யளிப்பதாகுமென்பது, இல்லாமையால் அளிப்பதாகும் எனக் காரணகாரியப் பொருளில் வந்தது; மழையின்றிப்பயிர்வாடிற்று என்றாற்போல. அளிப்பதாகும் என்பது ஒரு சொல். தாமே என்பது அசை. (எ)

(அ - கை.) சிவபெருமானிடத்து அன்புடையவரே சிவசாயுச்சியத்தை யடைவரெனக் கூறுகின்றார்.

8. தூரியனாய்ப் பொருள்களுக்குத் துளக்கமிலா தொன்றாகி
ஆரியமா மநுபவமா மதன்மேலன் புடையவவன்
காரியலுங் குழன்மடவாய் கருதானே யாயிடினும்
நேரியதாய் நித்தமாம் பதமடைவ னெறிமையினால்.

(இ - ள்.) கார் இயலும் குழல்மடவாய் - மேகம்போலுங் கூந்தலையுடைய இளமை வாய்ந்தவளே, பொருள் களுக்குத்தூரியனாய் - (பசுப்பொருள் பாசப்) பொருள்களுக்கு அதீதனாயும், துளக்கம் இலாது ஒன்றாகி - (அப்பொருள்களோடு கலந்து நின்றும் அப்பொருள்கள் போல) நிலைவேறுபடாது என்றும் ஒரு தன்மையுடைய தாகியும், ஆரியம் ஆம் அநுபவம் ஆம் - செல்வமாயும் (முத்தர்களால்) அநுபவிக்கப் படுவதாயும் உள்ள, அதன்மேல் அன்புஉடைய அவன் - சிவபரம்பொருளினிடத்து விட்டு நீங்காத அன்பு வைத்திருப்பவன் (எவனோ) அவன், நேரியது ஆய் நித்தம் ஆம் பதம் கருதானே ஆயிடினும் - அதிசூக்குமமாயும் மாறுதலை யடையாததாயும் உள்ள முத்தியை விரும்பாதவனாக இருப்பினும், நெறிமையினால் அடைவன் - அன்புவைத்திருக்கும் முறைமையினால் அதனையடைவன் எ - று.

(பொ - ரை.) மேகம்போலுங் கூந்தலை யுடைய இளமைவாய்ந்தவளே! (பசுப்பொருள் பாசப்) பொருள்களுக்கு அதீதனாயும், அப்பொருள்க

* திருக்குறள் அறன்வலியுறுத்தல். செ. க.
‡ ஷை மெய்யுணர்தல். செ. அ.

186944

ளோடு கலந்து நின்றும் அப்பொருள்கள்போல நிலை வேறுபடாது என்றும் ஒரு தன்மையுடையதாகியும், செல்வமாயும், முத்தர்களால் அநுபவிக்கப் படுவதாயும் உள்ள சிவபரம் பொருளினிடத்துவிட்டு நீங்காத அன்புவைத் திருப்பவம் (எவனோ) அவன், அதிசூக்குமமாயும் மாறுதலை யடையாததா யும் உள்ளமுத்தியை விரும்பாதவனாக இருப்பினும், அன்புவைத்திருக்கும் முறைமையினால் அதனையடைவன் எ - று.

(க - ரை.) சிவபெருமானிடத்து அன்புடையவன் முத்தியை விரும்ப வில்லையாயினும் அதனை யடைவன் என்பதாம்.

தூரியன் - அதீதன்.

பொருள்களனைத்தும், பதி பசு பாசமென்னும் மூன்றனுளடங்கும். அவற்றுள் பதிப்பொருள் ஏனைய பசுபாசப் பொருள்களோடு கலந்து நிற்பி னும் அப் பொருள்களுக்கு எட்டாதது என்பதுணர்த்தவும், கலக்கப்படும் பசுப்பொருள் கேவல சகல சுத்தமென்னும் நிலைவேறுபாட்டினையும், பாசப் பொருள் காரணரூபமா யொடுங்குதல் காரியரூபமாய் விரிதலென்னும் நிலை வேறுபாட்டினையும் பொருந்துமாறுபோல நிலைவேறுபடாதது என்பதுண ர்த்தவும் பொருள்களுக்குத்தூரியனாய் துளக்கமிலா தொன்றாகி யென் றார்.

ஒன்று - ஒருதன்மை.

ஆரியம் - செல்வம். சிவப்பொருள் செல்வமெனப்படுமென்பது 'திரு வே யென் செல்வமே' என்பது முதலிய திருவாக்குக்களானறிக. அதீதமா யினும் அநுபவிக்கப்படும் செல்வமாகும் என்பதுணர்த்த, ஆரியமாம் அநு பவமாம் என்றார். எனவே, பசுபோத முடையபெத்தர்க்கு அதீதமாயும், சிவபோதமுடைய முத்தர்க்கு அநுபவிக்கப் படுவதாயும் இருப்பது சிவப ரம்பொருள் என்றவாறாயிற்று.

அதுவென்று சிவபரம்பொருளைக் கூறுவது மகாவாக்கிய வழக்கு.

நேரியம் - அதிசூக்குமம்.

பதம் - முத்தி.

அது என்று சுட்டப்படும் சிவபரம் பொருளினிடத்து அன்புவைத் திருப்பவன் முத்தியை விரும்பவில்லையாயினும் நெறிமையினால் அதனைய டைவனென்றார். நெறிமை - முறைமை. முறைமையென்பது அன்பின் முறைமையைக் குறிக்கும். அன்பு, மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிர தரம் என நான்குவகைப்படும். அவற்றுள்,

மந்ததர அன்பு, கடவுட்பற்று ஒரு கூறும் உலகப்பற்று மூன்றுகூறும் உடையது.

மந்த அன்பு, கடவுட்பற்று இருகூறும் உலகப்பற்று இரு கூறும் உடையது.



தீவிர அன்பு, கடவுட்பற்று மூன்றுகூறும் உலகப்பற்று ஒருகூறும் உடையது.

தீவிரதர அன்பு, உலகப்பற்று ஒரு சிறிதுமின்றி கடவுட்பற்றுவிட்டு நீங்காதிருப்பது.

நான்காவதாகிய தீவிரதர அன்பையே நெறிமையினால் என்பது குறி க்கும். சிவபரம்பொருளினிடத்து விட்டு நீங்காத அன்புடைமையினால் முத்தியை விரும்பவில்லையாயினும் அதனையடைவனென்பதன் கருத்தை ஆராய்வாம்.

முத்தியென்பது விடுதல். விடப்படுவது பாசம். விடுவது பசு. இந்தப் பசு யாதானும் ஒன்றைப் பற்றி நிற்கும் தூலசித்து. ஆதலின் பாசத்தை விட்டுத் தனித்துநில்லாது பதியைப்பற்றி நிற்கும். ஆகவே, முத்தியென் பது பாசத்தைவிட்டுப் பதியைப்பற்றி நிற்றலென்பது பெறப்படும். பட வே, பதியைப்பற்றி நிற்கும் நிலையில் பாசம் நீங்கி விட்டமையால் பாசத் தைவிட வேண்டுமென்று கருதவேண்டுவதில்லை. கருதவுமாட்டான். பாச நீக்கத்தில் சிவப்பேறும், சிவப்பேற்றில் பாசநீக்கமும் உடனிகழும். ஆயி னும் சிவப்பேற்றினாலேயே பாசம் நீங்கவேண்டுதலின் ஒன்றை யொன்று பற்றுதலென்னுங் குற்றமில்லை. இது, சூரியோதயத்தில் இருள்நீக்கமும், இருள் நீக்கத்தில் சூரியோதயமும் நிகழுமாயினும், சூரியோதயத்தினாலே யே இருள்நீங்குமாறு போலாம். முத்தியென்னுஞ் சொல்லிற்குரிய சிறந்த பொருள் பதியைப் பற்றி நிற்றலென்னும் இக்கருத்தினை விளக்குதற் பொ ருட்டே நேரியதாய் நித்தமாம்பதம் என்று இலக்கணவகையாற் கூறினார். இப்பதமே மேலே அதுவெனப் பொருள்வகையால் சுட்டப்பட்டது. அப் பொருளைவிட்டு நீங்காமையின் வேறாக முத்தியென்பதொன்றில்லை யாக லின், கருதானேயாயிடினும் அடைவன் என்றார். இக்கருத்துப் பற்றியே *'கூடுமன்பினிற்கும் பிடலேயன்றி, வீடும்வேண்டா விறலின் விளங்கினார்.' என்றருளிச் செய்தனர் ஸ்ரீசேக்கிழார்நாயனார். (அ)

(அ - கை.) சிவபெருமானிடத்து அன்பு இடையறாது நிகழவேண்டு மாயின், தேகப்பற்று முற்றும் நீங்கவேண்டுமெனக் கூறுகின்றார்.

9. உருவருவாவ தியாதென் றுரைத்திடினகங் காரந்தான்
மருவியவடிவ தாகும் வடிவது மறவே விட்டால்
உருவிலாச் சத்தியத்தா லுலகெலாந் தோன்றலாலே
பொருவிலாச் சத்திசத்தியானம் பொருந்திட வுரைத்ததன்றே.

(இ - ள்.) அகங்காரம் மருவிய வடிவுயாதென்று உரைத்திடின் உரு அரு ஆவதாகும் - (யானென்னும்) அகங்காரம் பொருந்துதற்குரிய வடிவம்

* பெரியபுராணம் திருக்கூட்டச் சிறப்பு. செ. அ.

யாதென்று கூறுமிடத்து தூலசூக்கும மென்னும் உடம்பாகும், வடிவதும் அறவேவிட்டால் உருவிலாச் சத்தி - அவ்வுடற்பற்று முற்றும் நீங்கினால், மாயாகாரிய வடிவத்தோடு தொடர்பில்லாத சத்திவடிவானசிவம் விளங்கித் (தோன்றும்) - உலகு எலாம் அத்தால் தோன்றலால் பொருவு இலாசத்தித் தியானம் பொருந்திடவுரைத்தது - சரம்அசரம் என்னும் இருகூற்றுப் பிரபஞ்சங்களும் அச் சிவபரம் பொருளினாலேயே தோன்றி நின்று ஒடுங்குதலால் ஒப்பில்லாத அச்சிவத்தியானமே செய்யத்தக்க தென்று நூல்கள் கூறிற்று எ - று.

(பொ - ரை.) யானென்னும் அகங்காரம் பொருந்துதற் குரியவடிவம் யாதென்று கூறுமிடத்து, தூலசூக்குமமென்னும் உடம்பாகும். அவ்வுடற் பற்றுமுற்றும் நீங்கினால், மாயாகாரிய வடிவத்தோடு தொடர்பில்லாத சத்திவடிவான சிவம் விளங்கித்தோன்றும். சரம் அசரமென்னும் இருகூற்றுப் பிரபஞ்சங்களும் அச்சிவபரம் பொருளினாலேயே தோன்றிநின்று ஒடுங்குதலால் ஒப்பில்லாத அச்சிவத்தியானமே செய்யத்தக்கதென்று நூல்கள் கூறிற்று எ - று.

(க - ரை.) உடற்பற்று முற்றும்நீங்கினால் சிவம் விளங்கித்தோன்றும். தோன்றவே, அச்சிவத்தினிடத்து அன்பு இடையறாது நிகழும் என்பதாம்.

அகங்காரந்தான் என்றவிடத்து தான் - அசை. வடிவது என்றவிடத்து அது பகுதிப்பொருள் விகுதி. சத்தியென்பது சத்திவடிவான சிவத்தைக் குறித்தது. அதனாலென்பது அத்தாலென நின்றது. *பெற்றத்தால் என்புழிப்போல.

தோன்றல் என்பது †"ஒருமொழி ஒழிதன்னினங்கொளற்குரித்தே" என்னும் விதிப்படி நிற்றல் ஒடுங்குதல் களையுந்தழுவும்.

அன்றே - அசை.

அகங்காரம் மருவியவடிவுயாது என்னும் அநுவாதத்தால், வடிவம் பற்றி அகங்காரம் நிகழுமென்பது பெறப்பட்டது. உயிருக்குப்பற்றப்படும் பொருள் உடலும் சிவமுமாம். அவற்றுள் உடலைப்பற்றி நிற்குங்காலத்து நானே முதலென்னும் அகங்காரந் தோன்றும். சிவனைப்பற்றி நிற்குங்காலத்து நானெனும் முனைப்புத் தோன்றுமாறில்லை. இக் கருத்துப்பற்றியே ¶"நானென ஒன்றில்லென்று" எனச் சிவஞானபோதங்கூறிற்று.

சிவம் தன்னோடு எக்காலத்தும் பிரிப்பின்றி நிற்பினும் உடற்பற்று உள்ளளவரையும் விளங்கித்தோன்றாது. உடற்பற்று அறவே நீங்கினால்

* திருக்குறள் சுற்றந்தழால். ௪.

† நன்னூல். சூ - ம். ௩௫௮.

¶ சிவஞானபோதம். ௧௦-ம் சூ-ம். ௧ம் அதி



விளங்கித்தோன்றும். இக்கருத்துப்பற்றியே 0"யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த வுலகம் புகும்" என்றனர் தேவர். (௯)

(அ - கை.) தேகப்பற்று முற்றும் நீங்கிச் சிவத்தைப்பற்றி நிற்குங் காலத்துச் சிவம்வாயிலாய் ஆன்மாவினிடத்து நிகழும் சிவஞானமே முத்திக்கு வித்தெனக்கூறுகின்றார்.

10. யானெனு மதனைநீக்கி யேகமாய் நின்றஞானம்
ஆனவவ் வொளியாய்த் தோன்று மதுமுத்திவித்துமாகித்
தேனமர் கரியகூந்தற் செய்யவாய் பரந்துநீண்ட
மானமர் விழியாய்மேலாம் யோகவத் தகமுமாமால்.

(இ - ள்.) தேன் அமர் கரிய கூந்தல் செய்யவாய் பரந்துநீண்ட மான் அமர்விழியாய் - வண்டுகள் தங்கிய கரியகூந்தலையும், செவ்வாம்பல் போன்ற வாயினையும், விரிந்து நீண்ட மான்போலும் பார்வையினையும் உடையவளே, யான் எனும் அதனைநீக்கி ஏகமாய் நின்றஞானம் - (ஆன்மா) நான் ஒருமுதல் என்றெண்ணுதற்கு ஏதுவாய் நின்ற உடற்பற்றை நீக்கிச் சிவத்தைச் சார்ந்து சிவமாய்நிற்குங்காலத்து நிகழும் சிவஞானம், ஆன அவ்வொளியாய்த் தோன்றும் - சிவமாகிய அவ்வொளிபோலத் தோன்றும், அது முத்திவித்தும் ஆகிமேலாம் யோகவத்தகமும் ஆம் - அந்தச் சிவஞானம் முத்தியை உண்டுபண்ணுவதாயும் சிவனோடுகலந்து நிற்குந் தொழிலினையுடையதாயும் ஆகும் எ - று.

(பொ - ரை.) வண்டுகள்தங்கிய கரிய கூந்தலையும், செவ்வாம்பல் போன்றவாயினையும், விரிந்து நீண்ட மான்போலும் பார்வையினையும் உடையவளே (ஆன்மா) நான் ஒருமுதலென்றெண்ணுதற்கு ஏதுவாய் நின்றஉடற்பற்றைநீக்கிச் சிவத்தைச்சார்ந்து சிவமாய் நிற்குங்காலத்து நிகழும் சிவஞானம், சிவமாகிய அவ்வொளிபோலத் தோன்றும். அந்தச் சிவஞானம் முத்தியை உண்டுபண்ணுவதாயும், சிவனோடுகலந்து நிற்குந் தொழிலினையுடையதாயும் ஆகும் எ - று.

(க - ரை.) சிவஞானம் முத்திக்கு வித்தாயும் சிவயோகத்தொழிலினையுடையதாயும் விளங்கும் என்பதாம்.

ஆல் - அசை.

ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம், பாசஞானம் பசுஞானம் பதிஞானமென முத்திறப்படும்.

பாசஞானமாவது - தேகேந்திரிய அந்தக் கரணங்களின் வாயிலாக ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

0 திருக்குறள். துறவு. செ. ௬.

பசுஞானமாவது - தற்போதம்வாயிலாக நான் ஒருமுதலென்று ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

பதிஞானம், ஆராய்ச்சிஞானம் அநுபவஞானமென இருவகைப்படும். அவற்றுள், ஆராய்ச்சி ஞானமாவது - தேகம்தானன்று சிவனோடு பிரிப்பின்றி நிற்றலேதன்னுண்மையென நூல்வழியாலும் குருவினருளுபதேசத்தாலும் அறிந்தவிடத்து, தேகபற்று நீங்கிச் சிவத்தைப்பற்றி நிற்கும் ஞானம். இந்நிலையில் சிவம்விளங்கித் தோன்றுதலில்லை. ஆயினும் விளங்கித் தோன்றுதற்பொருட்டு அச்சிவப்பொருளையே சிந்தித்துக்கொண்டிருத்தலின், அச்சிந்தனை சிவஞானமெனப்பட்டது.

அநுபவஞானமாவது - அச்சிந்தனையால் சிவம்விளங்கித்தோன்ற அதனோடு இரண்டறக்கலந்துநின்றுதான் சிவமாய்விளங்கும் ஞானம்.

இந்த அநுபவஞானத்தை உண்டுபண்ணுவதும் சிவனோடுகலந்து நிற்கச் செய்வதுமாகிய ஆராய்ச்சிஞானமே ஏகமாய் நின்றஞானமென இச்செய்யுளில் கூறப்பட்டது.

எவற்றிற்குங் கருத்தாவாயிருக்குந்தன்மை சிவனொருவனுக்கே உண்டு; ஏனையோருக்கில்லையென்பது தோன்ற சிவம் ஏகமெனப்பட்டது. * "ஒன்றென்ற தொன்றேகா ணொன்றேபதி" என்னுஞ் சுருதி இக்கருத்தினை வலியுறுத்தும்.

நின்றஞானம் என்பது நிற்குங்காலத்து நிகழும்ஞானம் என்னும் பொருள்தோன்றநின்றது. 'ஆறுசென்றவெயர்' என்பதுபோல. ஆறு - வழி. வெயர் - வெயர்வை.

சிவனைப்பற்றி நிற்குங்காலத்து நிகழும் சிவஞானம், சிவம்போலப் பிறிதொன்றனைப் பற்றாது விளங்கும் என்பது உணர்த்துதற்கு ஆன அவ்வொளியாய்த் தோன்றுமென்றார்.

ஆய் - உவமவாசகம். ¶ மாடாவேனோ என்றாற்போல.

ஞானம் மூவகைப்படுமென்பதற்கு உதாரணம். பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே நேசமொடு முள்ளத்தே நாடி. (சிவஞானசித்தியார். கம். சூ - ம். செ. க.) (கo)

(அ - கை.) முத்தியை விரும்புகின்றவன் சிவஞானமாகிய சிவயோகத்தைப் பயிலவேண்டுமன்றி, நாடி முதலியவற்றைப்பற்றிச் செய்யுங் கருமயோகத்தைப் பயிலக்கூடாதெனக் கூறுகின்றார்.

11. சக்கரநாடி சான்றோர் வழித்தெய்வ ரூபமூல
அக்கர மண்டலங்கள் ஞானம்போ லழகின்றாகும்
மக்கடோய் மாயாவிச்சை மந்திரம் பிராணயாமம்
தொக்கசீர் ஞானஞ்சேரத் தொடங்குவார் தொடங்கலாகா.

* சிவஞானபோதம் உ. சூ - ம். க. அதி. வெ. உ.
¶ திருவாசகம். கோயில் மூத்ததிருப்பதிகம் செ. எ.



(இ - ள்.) சக்கரம் - மூலாதார முதலாகிய ஆறாதார சக்கரங்களும் நாடி - இடைகலை பிங்கலை சுழுமுனையென்னும் நாடிகளும், தெய்வரூபம் - ஆதாரங்களில் வசிக்குந் தெய்வங்களும் அவற்றின் வடிவங்களும், மூல அக்கரம் - பீசாக்கரங்களும், மண்டலங்கள் - சோமசூரியாக்கினி மண்டலங்களும் ஆகிய இவற்றின் தியானம், சான்றோர் வழிஞானம் போல் அழகு இன்று ஆகும் - அறிவுடையார் பயிலும்ஞானம்போலச் சிறப்புடையதன்று, சீர்தொக்கஞானஞ் சேரத்தொடங்குவார் - சிறப்பு நிறைந்தசிவஞானத்தை அடைய முயலுவோர், மக்கள் தோய்மாயா விச்சை மந்திரம் பிராணயாமம் தொடங்கலாகா - அபக்குவராயுள்ள மனிதர்கள் பயிலுகின்ற மாயாவித்தைக்குரிய மந்திரம் பிராணயாமங்களைப் பயிலுதல் கூடாது எ - று.

(பொ - ரை.) மூலாதார முதலாகிய ஆறாதார சக்கரங்களும், இடைகலை பிங்கலை சுழுமுனையென்னும் நாடிகளும், ஆதாரங்களில் வசிக்குந் தெய்வங்களும் அவற்றின் வடிவங்களும், பீசாக்கரங்களும், சோமசூரியாக்கினி மண்டலங்களும் ஆகிய இவற்றின் தியானம், அறிவுடையார் பயிலும் ஞானம்போலச் சிறப்புடையதன்று. சிறப்புநிறைந்த சிவஞானத்தை அடையமுயலுவோர், அபக்குவராயுள்ள மனிதர்கள் பயிலுகின்ற மாயாவித்தைக்குரிய மந்திரம் பிராணயாமங்களைப் பயிலுதல்கூடாது எ - று.

(கு - ரை.) ஞானயோகத்தை அநுட்டிப்பவர் கருமயோகத்தை அநுட்டித்தல்கூடாது என்பதாம்.

சான்றோரெனமுன்வரக்கூறி மக்களெனப் பின்னர்க்கூறினமையால், சான்றோரல்லாத அபக்குவராயுள்ள மனிதரென்பது பெறப்பட்டது - மூலம் அக்கரம் எனப்பாடங்கொள்ளினும் மூலமாகிய அக்கரம் எனப்பொருள்பட்டு பீசாக்கரத்தையே குறிக்கும்.

ஞானயோகத்துக்கு அங்கமாயுள்ள மந்திரம் பிராணயாமங்கள் பயிலத்தக்கனஎன்பது தோன்ற, மாயாவிச்சைமந்திரம் பிராணயாமம் தொடங்கலாகா என்றார். (கக)

(அ - கை.) சிவஞானத்தால் சிவமாய்விளங்கும் சிவன்முத்தர்க்குச் சிந்தனைபுறத்துச் செல்லுதல் கூடாதெனக்கூறுகின்றார்.

12. மந்திரஞ் செபந்தியானம் பூசனைவணக்கம் வேண்டா
அந்தமி லாதமுத்திக் குபாயமே யறியவேண்டும்
சிந்தனை புறமேசெல்லிற் றுயரமே திரியமீட்கின்
பந்தமாந் துன்பநீங்கிப் பரம்பர வின்பஞ்சேர்வார்.

(இ - ள்.) மந்திரம் செபம் தியானம் பூசனை வணக்கம் வேண்டா - (சீவன்முத்தர்) மந்திரங்களைச் செபித்தலும், மூர்த்திகளைத் தியானித்தலும் பூசைசெய்தலும், வணங்குதலும் ஆகிய தொழில்களைச்செய்ய வேண்டாம், அந்தம் இலாத முத்திக்கு உபாயமே அறியவேண்டும் - கெடுதலில்லாத பாமுத்திக்குரிய சாதனத்தையே பயிலவேண்டும், சிந்தனைபுறமே செல்லில் துயரம் - அறிவுபுறத்துச் செல்லின் துன்பமே உண்டாம், திரிய மீட்கின் பந்தமாந் துன்பம்நீங்கி பரமான இன்பம் சேர்வர் - அகத்துச் செல்லும்படி திருப்பின் கட்டுப்படுதலாகிய துன்பத்தினின்றும் நீங்கி மேலான இன்பத்தை யநுபவிப்பர் எ - று.

(பொ - ரை.) சீவன்முத்தர், மந்திரங்களைச் செபித்தலும் மூர்த்திகளைத் தியானித்தலும் பூசைசெய்தலும் வணங்குதலுமாகிய தொழில்களைச் செய்யவேண்டாம். கெடுதலில்லாத பரமுத்திக்குரிய சாதனத்தையே பயிலவேண்டும், அறிவுபுறத்துச் செல்லின் துன்பமேஉண்டாம். அகத்துச் செல்லும்படிதிருப்பின் கட்டுப்படுதலாகிய துன்பத்தினின்றும் நீங்கிமேலான இன்பத்தை யநுபவிப்பர் எ - று.

(க - ரை.) சீவன்முத்தர் அறிவு, புறத்து விடயங்களிற் செல்லாது அகத்துநிகழும் சிவாநுபவத்திலேயே அழுந்தவேண்டும் என்பதாம்.

சேர்வார் என்னும் பயனிலையால், சீவன் முத்தரென்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

மேலைச்செய்யுளில் மாயாவிச்சை மந்திரம் பிராணாயாமம் என்று கூறப்பட்டதனையே, சிந்தனைபுறமே செல்லிற்றுயரமே என்பதறிவித்தற்கு அநுவாதமாக எடுத்துக்கொண்டார். சிவமந்திரத்தைச் செபித்தலும் சிவத்தியானஞ் செய்தலும் சிவபூசைசெய்தலும் சிவனைவணங்கலுமாகிய இவை முத்திக்குச்சாதனமாகுமே யன்றி பந்தத்தைச் செய்யா. சீவன்முத்தன் சிவமேயாயிருக்கும் நிட்டையினின்று நீங்கின், தனக்குச் சிவாநுபூதியை உண்டுபண்ணியமுடிவான சாதனத்தை மீண்டும் பயிலுதலோடு சிவாநுபூதிச் செல்வராகிய சிவனடியாரையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு வழிபட வேண்டும். இவ்வழிபாடு சிவனையே சிந்திக்கச் செய்து சிவாநுபவத்தில் நிலைக்கச் செய்தலின், இச் சிந்தனை அகத்து நிகழ்தலோடொக்குமன்றிப் புறத்துச் செல்லுதலாக ஆகாது. * "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா, அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ, மாலறநேய மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரனெனத் தொழுமே." என்னும் சுருதி இக்கருத்தினை வலியுறுத்துமாறு காண்க. (கஉ)

* சிவ[illegible] ம.

# செய்தித் திரட்டு.

காசியாத்திரை:—கொத்தமங்கலம் திருவாளர் சி. ராம. மு. இலக்குமணச்செட்டியார், மனைவி மக்கள்சுற்றத்தினருடன் காசியாத்திரை செய்து சுகமே வந்து சேர்ந்தார்கள்.

பள்ளத்தூர் திருவாளர் மு. ராம. சொ. ராம. முத்துவீரப்ப ஐயா அவர்கள் காசியாத்திரை செய்து யாத்திரை நிறைவேறி ஊருக்குவருவதாகத்தெரிவித்து விபூதி பிரசாதம் அனுப்பியுள்ளார்கள்.

சென்னை:—Trojan கம்பேனியார் பின்வருமாறு அறிவிக்கிறார்கள் மைசூர் கெவர் மெண்டார் கடன்பத்திரம் 1951 ஹூ முதல் 1958-ம் வருஷத்துக்குள் கொடுப்பதாக $3\frac{1}{2}$ வட்டி கடன்பத்திரம் 50 லெட்ச ரூபாய்க்குவெளியிடுகிறார்கள், 100 ரூபாய் பத்திரம் 100 ரூபாய்க்கே கொடுக்கப்படும் இந்தக்கடன் பத்திரம் அக்டோபர்மீ 15௳ திறந்து டிசம்பர் 14௳க்குள் குறிப்பிட்ட தொகை சேருகிறவரை கொடுக்கப்படும் விருப்பமுள்ளவர்கள் அப்பிளிக்கேசனும் பணமும் உரியகாலத்தில் தங்களுக்கு அனுப்பிக்கொள்ளலாம்.

புதுவை:—ஸ்ரீபாதபூசை அம்பலத்தாடும் மடாலயத்தில் புரட்டாசி உஉ௳ முதல் கூ0௳வரை நவராத்திரி பூஜை நன்கு நடைபெற்றது.

மதுரை:—மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் கார்த்திகை கூ௳ புதன்கிழமை திருக்கார்த்திகை நாள் இலட்சதீபம் வழக்கம்போல ஏற்றுவதற்கும் அதன்பின்பு நடக்கும் சாந்திமகாபிடேகத்திற்கும் அன்பர்கள் வந்து தரிசித் தின்புறவும். ஒவ்வொரு கடைகளிலிருந்தும் வருஷவாரி பணவுதவிபுரியவும் பணம்உதவுவோர் மதுரைமீனாட்சி அம்மன்சந்நிதி அறுபத்துமூவர்குருபூசை மடாலயத்தில் இலட்சதீபம் சுப. ராம. தெ. தெக்ஷணாமூர்த்தி செட்டியாருக்கு அனுப்பவும் வேண்டுமென நகரத்தார் திருமுகம் வழங்கியுள்ளார்கள்.

திருக்கார்த்திகை தீபம்:—இவ் வருடம் கார்த்திகை மீ௳யாரி கூ௳யா என்பது தெளியவேண்டும். சில பஞ்சாங்கங்கள், கூ௳ செவ்வாய் சதுர்த்தசி கக-கக பரணி, கூக-௬௬ லும் சிலபஞ்சாங்கங்கள் கூ௳ புதன் பூர்ணை ௬0-உச கார்த்திகை கூஉ-கூ லும் குறிக்கின்றன வென்றும் காரணாகமவாக்கியப்படி கூ௳ யே கொளற்பால தென்றும் இதனைத் தெளிவுறப்புதினத்தாள்களில் பிராமாணமூலம் விளக்கும்படிக்கும் திருமுதுகுன்றம், சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியார் தெரிவித்துக்கொள்கின்றனர்.

வலங்கைமான் ஆண்டான்கோவில்:—நாசிங்க முனையரையர் திருவருட் கழகத்தாரால் புரட்டாசி கூ௳ நாசிங்க முனையரைய சுவாமிகள் குருபூஜைவிழா சிறந்த சொற்பொழிவுகளுடன் இனிது நடைந்தேறியது.

தெய்வீக மலையமன்னர் சங்கத்தின் இருவிசேட கூட்டங்கள் முறையே, சின்னகரம், தொழுவூர் என்ற இரு விடங்களிலும் இனிது நடந்தேறின. அவ்வமயம் திருவாளர்கள், பகவான்தாஸ் உடையார், மதுரேச உடையார் அவர்களது தலைமைகளில் காரியதரிசி பி. எஸ். சுப்பிரமணிய உடையார் அவர்களும், தொண்டர் வைத்தியநாதன் அவர்களும் இனிய சொற்பொழிவுகள் செய்தனர். காரியதரிசி அவர்களது 'சுற்றுப்பிரயாணத் தீர்மானம்' ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது. நிறைவேற்றுக் கழகத்தினர் அப் பிரயாணத்தைத் துவக்கி ஆவன செய்வார்கள்.